லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-8 இதழ்-3 ஆகஸ்ட் - 2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



# ஒரு விவசாயி முதல்வர் ஆகக்கூடாதா?

## முதல்வர் பழனிசாமி ஆவேசம்





# வள்ளலார் அருளிய
# கல்ப மருந்து

## பத்தியமில்லா மருந்து

## குணமாகும் நோய்கள்






- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்

- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
- கபம் ■ காசம் ■ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ■ பித்தம்





போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் **K. இராஜமாணிக்கம்**

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

## ரெண்டு வாழபழ காமெடி!

விஸ்வரூபம் படத்தின் வில்லனும், பாலிவுட் நடிகருமான ராகுல் போஸ் சமீபத்தில் சண்டிகர் ஸ்டார் ஓட்டலில் 2 வாழைப்பழத்திற்கு 442 செலுத்திவிட்டு அதிர்ச்சியோடு வெளியேறினார். பழத்தையும், பில்லையும் டுவிட்டரில் வெளியிட்டு ஜிஎஸ்டி வரிவிதிப்பு குறித்து புலம்பிதீர்த்தார். அதன் பின்னரே ஓட்டல்களில் நடைபெறும் ஜிஎஸ்டி வரி குறித்த மறைமுக கொள்ளை வெளியானது. வரிவிலக்கு விதிக்கப்பட்ட வாழைப்பழத்திற்கு ஜிஎஸ்டி வரிவிதித்த ஓட்டலுக்கு இப்போது 25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டு, நோட்டீசும் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 2017ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஜிஎஸ்டி வரிவிதிப்பு முறை அமலுக்கு வந்தது. தெளிவற்ற இந்த வரிவிதிப்பு முறையால் படித்தவர் முதல் பாமரர்கள் வரை பலரும் குழப்பங் களையே எதிர்கொண்டு வருகின்றனர். அதிலும் நுகர்வோர் படும்பாடு சொல்லி மாளாது. எந்தெந்த பொருட்களுக்கு எத்தனை சதவீதம் ஜிஎஸ்டி என்பது பொருளாதார மேதைகளுக்கு மட்டுமே தெரிந்த விஷயம். ஆனால் இன்றைய நடைமுறையில் எந்த பில்லை எடுத்தாலும் ஜிஎஸ்டி வரி என கூடுதலாக 10 முதல் 50 வரை இடம் பெற்று விடுகிறது. உண்மையிலே தாங்கள் வாங்கும் பொருளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி சரியானதுதானா என்பதை அறியும் நிலையில் வாடிக்கையாளர்கள் இல்லை. நகர்புறங்களில் வசிப்பவர்களுக்கு கூட ஜிஎஸ்டி குறித்த விழிப்புணர்வு இன்று வரை இல்லை. கிராமப்புற மக்களோ பாக்கெட்டுகளில் அடைக் கப்பட்ட உணவு பண்டங்களில் கூட காலாவதி தேதியை சரியாக பார்த்து வாங்குவதில்லை.

இதன் விளைவு, உணவு பொருட்களை பொறுத்த வரை விற்பனையாளர்கள் வைத்ததே விலை என்றாகி விட்டது. பல ஓட்டல்களில் ஜிஎஸ்டி இல்லாத உணவு பொருட்களுக்கும் வரி விதித்து, வாடிக்கையாளர்கள் தலையில் கட்டி விடுகின்றனர். நுகர்வோரும் வரிவிதிப்பை நொந்து கொண்டே பொருட்களை வாங்கிச் செல்கின்றனர். கரகாட்டக்காரன் காலத்தில் இருந்தே குழப்பத்தை தோற்றுவிக்கும் வாழைப்பழங்கள், சமீபத்தில் விஸ்வரூபம் படம் வில்லனின் வேடிக்கையான 'டுவீட்டின்' மூலம் உண்மையை தோலுரித்தது.

பாலிவுட் நடிகருக்கு இப்படியென்றால், பாமரர் களின் நிலையை என்னவென்று சொல்வது?. ஸ்டார் ஓட்டல்கள் வரி ஏய்ப்பு செய்திட பல வழிமுறை களை கையாள்கின்றன. சில ஓட்டல்களில் வாடிக்கை யாளர்களுக்கு தரப்படும் பில் ஒரு மாதிரியும், கணக்கு காட்டப்படும் பில்கள் வேறு வடிவிலும் காணப்படுகின்றன. தங்கள் வருவாயை குறைத்துக் காட்ட ஓட்டல்களும், வியாபார நிறுவனங்களும் இரவு நேரத்தில் இளைஞர்களை கணினி முன்பு களம் இறக்கி விடுகின்றன. சில ஓட்டல்கள் 5 சதவீதம் ஜிஎஸ்டி வரி கொண்ட பொருளை 20 சதவீதம் என வரிவிதித்து வாடிக்கையாளர்களை ஏமாற்றுகின்றன. இதற்கு தீர்வுதான் என்ன? ஒவ்வொரு வியாபார நிறுவனங்களிலும் தங்களது பொருளுக்குரிய ஜிஎஸ்டி வரிவிதிப்பு பட்டியல் கண்டிப்பாக இடம் பெறுவது நல்லது. கலால் மற்றும் வரிவிதிப்பு துறையும் கண்கொத்தி பாம்பாக செயல்பட்டால் மட்டுமே வரிவிதிப்பின் பயன்களை அரசும், நுகர்வோரும் பெற முடியும்.

**– ஆசிரியர்**



# மாநில உரிமையை இழந்து வருகிறதா தமிழகம்?

அணைகள் பாதுகாப்பு மசோதா-2019'க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, நாட்டில் உள்ள 5,600க்கும் மேற்பட்ட அணைகளை ஒரே நடைமுறையை கடைப்பிடித்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அணைகளை தொடர்ந்து ஆய்வு செய்து, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக போதிய நிதி ஒதுக்கீடு செய்து, பழுது பார்த்து, அணைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். இதற்காக, 'தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையம்' அமைக்கப்படும்.

அணைகள் உள்ளிட்ட தேசிய உடைமை களில் பாதுகாப்பு என்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. அதேநேரம், அணை களின் பாதுகாப்பை முறைப்படுத்துவது தொடர்பான எந்த ஒரு சட்டமும், மாநில அரசுகளின் செயல்பாட்டையும், உரிமை களையும் எந்த வகையிலும் பறித்துவிடக் கூடாது. அரசியல் சாசனத்தின் 7வது அட்ட வணையில் 2வது பட்டியலில் இது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டம் இயற்றுதல் மற்றும் நிர்வாகம் தொடர்பான வரையறைகளும், எல்லைகளும் அரசியல் சாசனத்தின் இந்தப் பிரிவில் தெளிவாக குறிப்பிடப்பட்டு உள்ளன. எனவே, புதிய வரைவு சட்ட மசோதா, இந்த வரையறைகளையும், எல்லைகளையும் மதிப்பதாக அமைய வேண்டும்.

2010ம் ஆண்டு மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட மசோதாவில், எந்த சட்டத்தின் அடிப்படையில் இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது என்பது பற்றிய தெளிவான குறிப்பு இடம் பெற்றிருந்தது. ஆனால், புதிய மசோதாவில் இத்தகைய குறிப்பு இடம் பெற்றதாக தெரியவில்லை. ஒரு மாநிலத்திற்குள் மட்டுமே பாயும் நதியின் மீது கட்டப்படும் அணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் அவற்றை பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்பு முழுவதுமாக அந்த மாநில அரசின் கட்டுப்பாட்டிலேயே வரும்.

இது, 7வது அட்டவணையின் 2வது பட்டியலில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சம். ஆனால், புதிய மசோதாவில் இந்த அதிகாரத்தை தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இது முற்றிலும் அரசியல் சாசனத்திற்கு முரணானது மட்டுமின்றி, மாநில

அணைகள் பாதுகாப்பு கமிட்டி மீது அதிகாரம் செலுத்தக் கூடியதாகவும் உள்ளது.

புதிய மசோதாவில், ஒரு மாநிலத்தில் அமைந்துள்ள அணைகள், நீர்த்தேக்கங்களை மாநிலங்களுக்கு இடையேயான நீண்ட கால ஒப்பந்தங்கள் அடிப்படையில், வேறொரு மாநிலம் சொந்தம் கொண்டாடி, பராமரித்து, செயல்படுத்தி வரும் பிரச்னை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மாதிரியான அணைகளை தேசிய ஆணையம் தனது நேரடி கட்டுபாட்டில் பாதுகாத்து, பராமரிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் அணைக்கு சொந்தமான மாநிலத்தின் உரிமைகள் பறி போகாமல் காப்பது என்பது மத்திய அரசின் தலையாய கடமையாகும்.

உள்ளன. புதிய மசோதாவில் இந்த உரிமைகள் பாதிக்கக் கூடிய எந்த அம்சமும் இருக்கக் கூடாது.

இது, அந்த அணைகளை நம்பியுள்ள விவசாயிகள், பொதுமக்களை பெரிதும் பாதிக்கும். மேலும், கூட்டாட்சி தத்துவத்தை உடைக்கும் வகையிலான மசோதாவை நிறை வேற்ற மத்திய அரசு முயற்சி செய்யக்கூடாது. மாநில அரசின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப, நீதிமன்றத்திற்கு அப்பாற்பட்டு, விரிவாக ஆய்வுகளை மேற்கொண்டு, மாநில உரிமைகளை பாதிக்கும் அம்சங்களை நீக்க வேண்டும். அவற்றின் உரிமையை நிலை நாட்ட வேண்டும்.



அரசியல் காரணங்களுக்காக மத்திய அரசு ஒரு சார்பு நிலையை மேற்கொண்டால், பிரச்னை ஏற்பட்டு நீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விடும். தமிழ்நாட்டின் முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், துணக்கடவு, பெருவாரிபள்ளம் ஆகிய அணைகள், மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்கள் மூலம் தமிழக அரசு உரிமையுடன் நிர்வகித்து வருகிறது. ஆனால், இந்த அணைகள் பக்கத்து மாநிலத்தில்

இந்த மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், தமிழகத்தின் உரிமைகள் பறிபோகாமல் காக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கும், தமிழக எம்பி. க்களுக்கும் உள்ளது. அந்த கடமையை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இதில் கோட்டை விட்டால் மாநில உரிமையை இழந்து வாழ்வாதாரம் முழுவதுமாக பாதிக்கப்படும் என்று விவசாயிகள் கூறுவதில் நியாயம் உள்ளது.

**- முனைவர் M. சத்தியராஜ்**

# சாகாக் கலை

## எனப்படும்

# காயகல்பம்

Dr. K. ராஜமாணிக்கம்

கற்பம் உண்ணுங்காலங்களில், பசுவின் பால் பாசிப்பயிறு சோறு இரண்டும் சிற்றுணவு. மாமிசம், மீன், கடுகு, நல்லெண்ணெய் ஆகா. முழுகுதற்குத் தேங்காய் சேர்க்கவும். இப்பத்தியம் கடுமையாகக் காக்க வேண்டும்.

கற்பம் உண்ண வயது : இருபது வயதுக்கு மேல் நன்று. முப்பதுக்குள் மிகவும் நன்று. நாற்பத்துக்குள் உண்டால் பலிக்கும். ஐம்பதுக்குள் இன்னல் வராது. அறுபத்துக்குள் என்றால் உடல் பொன்னாகும். எழுபதுக்குமேல் பலிதமிராது.

காய சித்தியும் மூலப்புளியும் : சித்தர்களின் ஞானக் கோட்பாட்டின் படி காயம் சித்தியானால் மரணமில்லாப் பெருவாழ்வு வாழலாம். காயம் சித்தி பெற கற்பம் வேண்டும். காய சித்திக்குக் கற்பமாக அமைவது மூலப்புளி. மூலப்புளி என்பது என்னவென்று அறிந்து கொண்டு அதை முறைப்படுத்தி உண்டுவந்தால் எந்த நோயும் குணமாகும். எந்த நோயாலும் உடல் பாதிக்காது என்பர். மூலப்புளி என்பதே சித்தர் நெறியின்மூலப் பொருள். அதைக் கண்டு கொண்டால் எல்லாரும் சித்த நிலையை அடையலாம். இதுவே, சித்தர்கள் மேற்கொண்ட மறை பொருளின் இறுதி நிலையாகத் தோன்றும்.

**பறந்து போம் மூலப்புளி தின்றா யானால்**
**பசிக்கையிலே அன்னமுண்டு பசிதீர்ந்தாப் போலே**
**சிறந்து போம் தன்னுடலே காய சித்தி**

பசித்த போது உணவை உண்டால் பசி தீர்ந்து போவதைப் போல மூலப் புளியைப் புசித்தவுடன் உடலிலுள்ள குற்ற மெல்லாம் நீங்கி காயம் சித்தியாகும்.

**வள்ளலார் அருளிய கல்ப மருந்து**



**பத்தி யொடு மூலப்புளி உண்ட பேர்க்குப்**
**பரிவாகத் தேகமெங்கும் பொன்னதாகும்**
**இருப்பார்கள் மூலப்புளி உண்ட பேர்கள்**
**இயல்பாக ஒருவருக்கும் தெரியா தையா**

மூலப்புளியை உண்டவர்கள் உடல் பொன்னிறமாக மாற்ற மடையும். அவ்வாறு உண்டவர்கள் இயல்பாகவே எல்லாரையும் போலவே இருப்பார்கள். அவர்களின் நடவடிக்கையில் ஒரு மாற்றமும் இருக்காது எனத் தெரிகிறது.

மூலப்புளியின் இருப்பிடம் : மூலப்புளியை உண்பதால் காய சித்தி உண்டாகும். மரணமில்லை. உடல் பொன்னிறமாகத் தோன்றும் என்று கூறியவர்கள், மூலப்புளியின் இருப்பிடத்தை உரைக்கின்றார்கள்.

**கற்பம் இருப்பதும் உந்தனுள்ளேகலை**
**நாலும் இருப்பதும் உந்தனுள்ளே**
**மாயாத கற்பமது உன்னுக்குள்தான்**
**வளர்ந்திருக்கு தென்றறியார் மடையர் தாமும்**

என்றும் உரைப்பதிலிருந்து மூலப்புளி என்னும் கற்பம் உடலிலேயே வளர்ந்து இருப்பது தெரியவரும். மூலப்புளிதனைப் பன்றிநாய் தின்றது என்று, மூலப்புளி என்ன வென்று கூறாமல் குறிப்பினால் உரைக்கப்பட்டது. பன்றியும் நாயும் தின்றது என்றால் அது, மனிதக் கழிவுப் பொருள்

என்றே கருத நேரிடுகிறது. மனிதக் கழிவு கற்பப் பொருளா? என்ற ஐயம் மேலிடுகிறது. என்றாலும், பன்றி நாய் என்பதும் மறைபொருள் சொல்லாக இருந்து விட்டால், எவ்வாறு கண்டறிவது?

**ஆவதுவும் ஆதிபுளி உப்பி னாலே**
**அழிவதுவும் சுகபோகத் தாசை யாலே**

ஆக்கத்திற்கு உரிய பொருளாக ஆதி உப்பும் ஆதிப்புளியும் பயன்படுவதாகக் கூறப்பட்டது. அவை, சுகபோகத்தினால் அழியக் கூடியது என்றும் தெரிவதால், பன்றியும் நாயும் தின்றது என்பதன் பொருள் வேறாக இருக்கிறது. 'சிந்தையை உள்ளடக்கிச் சுழுமுனை தன்னை நோக்கித் தியானித்தால் 'ஆகாய கற்பம்' தானே கிடைக்கும். இந்த ஆகாய கற்பத்தை நாளும் உண்டு வந்தால் 'மரணமில்லாப் பெருவாழ்வு' கொள்ளலாம்.

யோக முறையை விரைவாகப் பெற 'மாமூலி மருந்தை' உட்கொள்ள வேண்டும். 'ஆதி கரு நெல்லி'யைக் கொண்டு வந்து குற்றங்களைப் போக்கித் தினமும் இருவேளை உண்டு வந்தால் யோகத்தின் 'ஆறு நிலை'களும் தானாகத் தோன்றிவிடும். 'வான மழை' பொழியத் தொடங்கும். அம்மழை நீரே ஆகாய கற்பமாகும். இம்முறையில் மூலப்புளியை அருந்த முனைந்தார்க்கு அனைத்து சுகமும் கிடைக்கப் பெறும் என வரும் திருவள்ளுவரின் கருத்தின்படி மாமூலி ஆதிகருநெல்லி மூலப்புளி என்பவை ஒரே பொருளை உரைக்கும் வெவ்வேறு பெயர்களாகக் கருதலாம்.

**பாதாள மூலியடி பாடாணம் தான் சேர்ந்து**
**வேதாளம் கூட்டியல்லோ வெண்டாரை நெய்யூற்றிச்**
**செந்தூர மையடியோ செகமெல்லாம் தான் மிரட்டித்**
**தந்த மருந்தாலே என் கண்ணம்மா**
**தனலாக வேகுறண்டி**

என்று அழுகணிச் சித்தர் குறிப்பிடுவார். பாதாளமூலி பூநீர்; பாடாணம்; பிரம்மராச்சசி என்னும் வேதாளம் ரயில் கற்றாழை; வெண்டாரை இரசம்; நெய்சிறுநீர் இவை



சேர்த்து செய்த செந்தூரம் உண்டால் காயசித்தி உண்டாகும் என்பது பொருள். இப்பாடலில் வரும் பாதாள மூலிபூநீரைக் குறிப்பதாக இருப்பதால் மூலப்புளி என்பது பூநீரைக் குறிக்கும் சொல் எனலாம்.

**சிவந்திருக்கும் மூலிகைதான் செடிதானல்ல**
**வீட்டிலே யிருக்குமடா அந்த மூலி**
**விளையுமடா காயோடே விரையில்லாதே**
**நில்லாத நிழல் சேர்ந்த தண்ணி ரோரம்**
**நிழலருகே முளைத்திருக்கும் மூன்று மூலி**
**கோவானூர் பொட்டலிலே**
**குண்டுமேனி அம்மன் கோயிலிலே**
**சாகா மூலி முளைத்திருக்கு ஞானப் பெண்ணே**

என்று கற்பப் பொருள் மறைபொருளாகக் கூறப்பட்டுள்ளது. என்றாலும் இது, மரணத்தை வெல்லக் கூடிய பொருள் என்பதால் சிறப்புக் கவனத்துடன் ஆராய்ந்தால் பயன் தரும். நில்லாத நிழலருகே முளைத்திருக்கும் மூன்று மூலி என்று குறிப்பால் உரைக்கப் பட்டிருக்கும் கற்பப் பொருள் அகரம் உகரம் மகரம் ஆகிய மூன்றும் ஒன்று சேர்ந்ததே. அது ஓம் என்னும் பிரணவப் பொருளாகும்.

**பாரடா சிவமூலி சகஸ்திரட் தெட்டின்**
**பாலிருக்கும் நாற்சரக்கைக் காணமாட்டார்**

என்று கற்பப் பொருளில் நான்கு பொருள்கள் கலந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அந்நான்காவது, கெந்தகம், பாதரசம், உப்பு, நஞ்சு என்பன. இந்நான்கில் கலந்துள்ள நஞ்சை நீக்கிச் சுத்தி செய்து முறைப்படி உண்பது கற்பமாகும். இதுவே உயிரின் மூலப்பொருள் எனச் சித்தர் வேதம் உரைக்கின்ற பிரணவம் ஆகும்.

**- தொடரும்**



# நடுத்தர மக்கள் வாங்கக்கூடிய விலையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள்! சாத்தியமா?



கடந்த நான்காண்டுகளில் மலிவு விலை வீடுகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. 2019-ம் ஆண்டின் முதலாம் காலாண்டுவரை உள்ள புள்ளிவிவரங்கள் அடிப்படையில் ரிசர்வ் வங்கி மேற்கொண்ட இந்த ஆய்வு முடிவு இப்போது வெளியாகியுள்ளது. அதனடிப்படையில் இந்தியாவின் பெரும்பாலான நகரங்களில் மலிவு வீட்டு விலை கடந்த 2016 முதலாம் ஆண்டிலிருந்து அதிகரித்துவருவதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

மும்பை, சென்னை, டெல்லி, பெங்களூரு, ஹைதராபாத், கொல்கத்தா, புனே, ஜெய்ப்பூர், சத்தீஸ்கர், அகமதாபாத், லக்னோ, போபால், புவனேஸ்வர் ஆகிய 13 நகரங்களை ரிசர்வ் வங்கி ஆய்வுக்கு எடுத்துக்கொண்டது. இந்த நகரங்களில் வழங்கப்பட்டுள்ள வீட்டுக் கடன் அடிப்படையில் இந்த ஆய்வை ரிசர்வ் வங்கி மேற்கொண்டது. தனிநபர்களின் வருமானத்தைக் கணக்கில் கொண்டு மலிவு வீடுகளின் விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக ரியல் எஸ்டேட் துறை மோசமான பின்னடைவைச் சந்தித்தது. ஆனால், தற்போது அதிலிருந்து ரியல் எஸ்டேட் துறை மீண்டு வந்துகொண்டிருக்கிறது.

அதன் காரணமாக இந்தியாவின் ரியல் எஸ்டேட் வளம் மிக்க நகரங்களின் புறநகர்ப் பகுதிகளில் மலிவு விலை வீடுகள் அதிகமாக உருவாக்கப்பட்டுவருகின்றன. உதாரணமாக சென்னையில் கூடுவாஞ்சேரி, பொத்தேரி பகுதிகளில் பல அடுக்குமாடிக் குடியிருப்பு வீடுகள் நடுத்தர மக்கள் வாங்கக்கூடிய விலையில் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் நடுத்தர மக்கள் பலர் பயனடைந்து வருகிறார்கள். அதேநேரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களின் எல்லைக்குள் நடுத்தர மக்களுக்கான மலிவு விலை வீடுகள் கிடைப்பது சாத்தியம் அல்ல. உதாரணமாக சென்னையில் நகரப் பகுதியான கோடம்பாக்கம், மாம்பலம், கே.கே.நகர் போன்ற பகுதிகளில் மலிவு விலை வீடுகள் உருவாக்கப்படவில்லை.

அதற்கான வாய்ப்பும் இல்லை. மத்திய அரசு சமீபத்தில் வெளியிட்ட நிதிநிலை அறிக்கையில் மலிவு விலை வீடுகளுக்காகச் சில சலுகைகளை அறிவித்துள்ளது. அதில் மலிவு விலை வீடுகளுக்கான வரையறையாக ரூ.45 லட்சம் எனக் குறிப்பிட்டுள்ளது. இந்தக் கணக்கின்படி பார்த்தால் பெரு நகரங்களின் எல்லைக்குள் மலிவு விலை வீடு என்பது கேள்விக்குறிதான். ரிசர்வ் வங்கியின் இந்த அறிக்கையின்படி இந்தியாவின் முதல் நிலை நகரங்களில் மலிவு விலை வீடுகளின் எண்ணிக்கை குறைந்துவருகின்றது. ஒட்டுமொத்த இந்தியாவில் மலிவு வீடுகளின் விலை (தனி நபர் வருமானத்துக்கு எதிராக) 61.5 ஆக இருக்கிறது. 2015 முதலாம் காலாண்டில் இந்தப் புள்ளி 56.1 ஆக இருந்தது.



இந்திய அளவில் மும்பையில் மலிவு வீடுகளின் விலை (தனி நபர் வருமானத்துக்கு எதிராக) 74.4 புள்ளியாக இருக்கிறது. 2015 முதலாம் காலாண்டில் இந்தப் புள்ளி 64.1 ஆக இருந்தது. இந்த நான்காண்டுகளில் 10.3 புள்ளி அளவுக்கு மலிவு விலை வீடுகள் அதிகரித்துள்ளது. ஆனால், 2018-ன் இறுதிக் காலாண்டை ஒப்பிடும்போது 2.5 புள்ளிகள் குறைவு. மும்பைக்கு அடுத்தபடியாக மலிவு வீடுகளின் விலை அகமதாபாத்தில் 70.4 புள்ளியாக இருக்கிறது. 2015 முதலாம் காலாண்டில் அகமதாபாத்தின் விலைப் புள்ளி 59.5 ஆக இருந்தது. இந்த நான்காண்டுகளில் அகமதாபாத்தின் மலிவு வீடுகளின் விலை 10.9 புள்ளிகள் அதிகரித்துள்ளன. அதேநேரம் 2018-ன் இறுதிக் காலாண்டை ஒப்பிடும்போது இது 1.3 புள்ளி குறைவு.

இந்திய அளவில் புவனேஸ்வரில்தான் மலிவு வீடுகளின் விலைப் புள்ளி குறைவாக உள்ளதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது. 2019 முதலாம் காலாண்டில் புவனேஸ்வரின் மலிவு வீடுகளின் விலைப் புள்ளி 54.3. ஆனால், 2015 முதலாம் காலாண்டுண்டன் ஒப்பிடும்போது இது 7.1 புள்ளிகள் அதிகம். புவனேஸ்வருக்கு அடுத்தபடியாக ஜெய்ப்பூர் மலிவு வீடுகளின் விலைப் புள்ளியில் (55.9) இரண்டாம் இடம் பிடித்துள்ளது. சென்னையின் மலிவு விலை வீடுகளின் விலைப் புள்ளியைப் பொறுத்தமட்டில் தொடர்ந்து ஏற்ற இறக்கங்களுடன் இருக்கிறது. 2019 முதலாம் காலாண்டில் சென்னையின் மலிவு வீட்டு விலைப் புள்ளி 58.6. இந்திய அளவில் சென்னை 6-ம் இடம் வகிக்கிறது.

டெல்லி, கொல்கத்தா, பெங்களூரு ஆகிய பெரு நகரங்களுடன் ஒப்பிடும்போது சென்னையின் மலிவு வீட்டு விலை அதிகரித்துள்ளதாக அறிக்கை தெரிவிக்கிறது. 2015 முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது இந்தக் காலாண்டின் விலைப் புள்ளி 7.3 புள்ளி அதிகம். அதேநேரம் 2018 இறுதிக் காலாண்டின் விலைப் புள்ளியைவிடவும் இது அதிகம்.

ஆனால் மற்ற பெரும்பாலான நகரங்களில் 2018 இறுதிக் காலாண்டின் விலைப் புள்ளிகளைவிட இந்தக் காலாண்டின் விலைப் புள்ளிகள் குறைந்திருக்கின்றன. இதிலிருந்து சென்னையில் வீட்டு விலை அதிகரித்திருப்பதை உணர முடியும். சென்னையின் வீட்டு விலை வீழ்ச்சி அடைந்திருப்பதாக இரு வாரங்களுக்கு முன்பு வெளியான ஜே.எல்.எல். அறிக்கை தெரிவித்ததை கணக்கில் கொண்டால், இந்த விலைப் புள்ளி வருங்காலங்களில் குறையும் என எதிர்பார்க்கலாம்.

**- அகிலாண்டேஸ்வரி**

# தமிழுக்கு பதிலாக இந்தி!



தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் வருகையை பதிவு செய்யும் பயோமெட்ரிக் கருவியில் தமிழ் நீக்கப்பட்டு, இந்தி சேர்க்கப்பட்டுள்ள சம்பவம் ஆசிரியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தில் 3,688 அரசு உயர்நிலைப் பள்ளிகள், 4,040 மேல்நிலைப் பள்ளிகளில் பயோமெட்ரிக் வருகை பதிவேடு முதல்கட்டமாக அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதில் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் தங்கள் வருகையை பதிவு செய்து வருகின்றனர். இதன் மூலம் ஆசிரியர்கள் காலதாமதமாக பள்ளிக்கு வருவது தடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஆதாரில் உள்ள முழு விவரங்களுடன் ஆசிரியர்களின் விவரங்கள் இஎம்ஐஎஸ் என்ற இணையதளத்திலும், தனி சாப்ட்வேரிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சென்னையில் இருந்தபடியே பள்ளிகளை கண்காணிக்கலாம். இந்த நடைமுறை கடந்த ஜூன் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், பயோமெட்ரிக் வருகைப்பதிவு கருவியில் தமிழுக்கு பதில் இந்தி மொழி சேர்க்கப்பட்டுள்ளது.

வேலூர் தொரப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களின் வருகையை பதிவு செய்ய பயோமெட்ரிக் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதில் ஏற்கனவே தமிழ், ஆங்கிலம் மொழியில் பெயர் விவரங்கள் காட்டப்பட்டு இருந்தது. வழக்கம்போல் பள்ளிக்கு வந்த ஆசிரியர்கள் தங்கள் வருகையை பதிவு செய்தபோது, தமிழுக்கு பதிலாக இந்தியும், ஆங்கிலமும் பதிவானது. இதைப்பார்த்த ஆசிரியர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

ஏற்கனவே ஆங்கிலம், இந்தி மொழிகளில் தபால்துறை தேர்வுகள் நடத்தப்படும் என மத்திய அரசு அறிவித்தது. இதற்கு திமுக உள்ளிட்ட தமிழக அரசியல் கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து தமிழ்மொழி உட்பட அனைத்து மாநில மொழியிலும் தபால்துறை தேர்வு எழுதலாம் என மத்திய அரசு அறிவித்ததுடன் தபால்துறை தேர்வையும் ரத்து செய்தது.

இந்நிலையில் பள்ளி வருகை பதிவை மேற்கொள்ளும் பயோமெட்ரிக் கருவியில் தமிழை நீக்கி, இந்தியை கொண்டு வந்திருப்பது ஆசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.





இதுகுறித்து பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, 'பயோமெட்ரிக் கருவியில் ஆசிரியர்களின் விவரங்களை ஆதார் அடிப்படையில் ஆங்கிலத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. அதன்படி, பயோமெட்ரிக் பதிவின் முகப்பதிவில் ஆசிரியர்களின் கைரேகை பதிவு, ஆசிரியர்களுக்கு தனித்தனியாக வழங்கப்பட்ட வருகைப்பதிவு செய்ய 8 இலக்கு எண் பதிவு ஆகியவை ஆங்கிலத்தில் மட்டுமே இருந்தது. ஆரம்பத்தில் இருந்தே இந்தி மொழி இருந்தது. தற்போது முகப்பதிவில் இந்தி மொழி திரையில் தெரிகிறது' என்றனர்.

**- K. ரமேஷ்குமார்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

**ஆண்/பெண் நிருபர்கள் தேவை**

தொடர்புக்கு

**மக்கள் விசாரணை ✷ அருணை முரசு**

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# செயற்கைச் சிறுநீரகம்

சிறுநீரகச் செயலிழப்பு (Acute renal failure) பல வழிகளில் வருகிறது. அவற்றை மூன்று விதமாகப் பிரிக்கிறது மருத்துவம். முதல் வழியானது ஓர் நாட்டுக்கு எதிராக அண்டை நாடுகள் படை எடுப்பதற்கு ஒப்பானது. சிறுநீரகத்துக்கு வருகிற ரத்தம் குறைவதுதான் இதற்கு அடிப்படைக் காரணம். விபத்தின்போது, அறுவை சிகிச்சை நடக்கும்போது, பிரசவத்தின் போது, கருக்கலைப்பு செய்கிறபோது ரத்த இழப்பு ஏற்படலாம். அதை உடனடியாகக் கவனித்துச் சரிசெய்யாவிட்டால், சிறுநீரகம் செயலிழக்கும். ரத்த வாந்தி, ரத்தப்போக்கு ஏற்பட்டாலும் இதே நிலைமைதான்.



சிறுநீரகத்துக்கு ஒவ்வாத வலி மாத்திரைகள், ஆன்டிபயாடிக் மருந்துகள், மூலிகைகள், பஸ்பங்கள், தூக்க மாத்திரைகள், போதை மாத்திரைகள் போன்றவற்றை மருத்துவரின் பரிந்துரையின்றிச் சாப்பிடும்போது சிறுநீரகம் செயலிழக்கிறது. உடலில் எங்காவது கடுமையான நோய்த் தொற்று இருந்து, அதைக் கவனிக்காமலிருந்தால், அது ரத்தத்தில் கலந்து 'செப்டிசீமியா'வை உருவாக்கும். அப்போதும் சிறுநீரகம் செயலிழக்கும்.

இவை தவிர விஷக்கடிகளின் போது, துத்தம் போன்ற விஷங்களைச் சாப்பிட்டுத் தற்கொலைக்கு முயலும்போது, தீ விபத்தின்போது எனச் சிறுநீரகச் செயலிழப்புக்குப் பெரிய காரணப் பட்டியல் இருக்கிறது. 'நெப்ரைடிஸ்' (Nephritis) எனும் சிறுநீரக அழற்சி நோய், காசநோய், நெப்ராடிக் சின்ட்ரோம், குறை ரத்த அழுத்தம், எலிக் காய்ச்சல் போன்றவை சிறுநீரகத்துக்குள் புகுந்து கலாட்டா செய்யும்போது சிறுநீரகம் செயலிழந்துவிடும்.

## சிறுநீரக நோயாளிகளுக்கு அற்புத கண்டுபிடிப்பாக இருக்குமா?

**இந்த நோயை எப்படித் தெரிந்து கொள்வது?:** வழக்கத்தைவிடச் சிறுநீர் குறைவாகப் போவது, திடீரெனச் சிறுநீர் கொஞ்சம்கூடப் போகாமல் 'ஸ்டிரைக்' செய்வது, சிறுநீரில் ரத்தம் போவது, விக்கல் ஏற்படுவது, மூச்சுத் திணறுவது, திடீரென உடல் வீங்குவது எனப் பல தொல்லைகள் தோன்றி உடனடி சிறுநீரகச் செயலிழப்பை அடையாளம் காட்டும். உடனடியாக மருத்துவரை அணுகி அறிந்து, மருத்துவ சிகிச்சையில் இதைக் குணப்படுத்திவிடலாம். காலம் தாழ்த்தினால் மட்டுமே 'டயாலிஸிஸ்' சிகிச்சை தேவைப்படும்.


நாட்பட்ட சிறுநீரகச் செயலிழப்பு 'சிகேடி' (Chronic kidney disease-CKD) எனப்படும் நாட்பட்ட சிறுநீரகச் செயலிழப்புதான் ஆபத்தானது. நீரிழிவு, உயர் ரத்தஅழுத்தம் ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்தத் தவறினால், இவ்வகைச் சிறுநீரகச் செயலிழப்பைச் சந்திக்க வேண்டிவரும். நோய் ஆரம்பித்துப் பல மாதங்கள் ஆன பின்னரும் அறிகுறி எதுவும் தெரியாமல் உடலுக்குள் உலா வருவது இதன் மோசமான குணம்.'சிகேடி'யின் தொடக்க நிலையில் இருக்கிறவர்களுக்கு ஒரு சிறுநீரகம் செயலிழந்தாலும், மற்றொரு சிறுநீரகம் வேலை செய்வதால், சிறுநீர் பிரிவதில் குறை இருக்காது.

**'சிகேடி'யின் அறிகுறிகள் என்ன?:** இரவில் அடிக்கடி சிறுநீர் போவது இதன் ஆரம்ப அறிகுறி. அப்போதே விழித்துக்கொண்டால், பிரச்சினை பெரிதாகாது. இல்லாவிட்டால், சோர்வு தலைகாட்டும். நடந்தால் மூச்சு வாங்கும். இதயம் படபடக்கும். பசி குறையும். சாப்பிடப் பிடிக்காது. குமட்டலும் வாந்தியும் தொல்லை செய்யும். எடை குறையும். அடிக்கடி விக்கல் வரும். சருமத்தில் அரிப்பு ஏற்படுவதும் ரத்தம் கசிந்து சிவப்புத் திட்டுகள் தோன்றுவதும் உண்டு. ரத்தசோகை ஏற்பட்டு முகம் வெளுக்கும்;

பாதம் வீங்கும். தலை முதல் பாதம்வரை எல்லா உறுப்புகளும் பாதிக்கப்பட்டு, அந்தந்த உறுப்பின் வெளிப்பாடாக ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அறிகுறிகள் தோன்றும்.

**என்ன சிகிச்சை?:** 'சிகேடி' ஏற்பட்டுவிட்டாலே டயாலிஸிஸ் அல்லது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைதான் ஒரே வழி என்று பலரும் அவசர முடிவுக்கு வருகிறார்கள். அப்படியல்ல. இந்த நோயில் முதல் கட்டம், இரண்டாம் கட்டம் என மொத்தம் 5 கட்டங்கள் இருக்கின்றன. இவற்றில் முதல் மூன்று கட்டங்களுக்கு மருத்துவ சிகிச்சை மட்டுமே போதுமானது. வேளாவேளைக்கு மறக்காமல் மருந்து சாப்பிடுவது, புரதமும் பொட்டாசியமும் குறைந்த உணவைச் சாப்பிடுவது, நீரிழிவையும் ரத்த அழுத்தத்தையும் கட்டுப்படுத்துவது, கொழுப்பைக் குறைப்பது, உப்பைக் குறைப்பது, தண்ணீரை 'அளந்து' குடிப்பது போன்ற பரிந்துரைகளைச் சரியாகப் பின்பற்றினால், சுமார் பத்து வருடங்களுக்குப் பெரிதாகச் சிக்கல் எதுவும் ஏற்படாமல் சிறுநீரகத்தைப் பாதுகாக்க முடியும்.





இந்தியாவில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தொடங்கி 50 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனாலும், இந்த சிகிச்சை தேவைப்படுவோர் அனைவருக்கும் சிகிச்சை கிடைக்க வழியில்லை. நடைமுறையில் இந்தியாவில் வருடத்துக்குச் சுமார் 3 லட்சம் பேருக்குச் சிறுநீரகம் தேவைப்படுகிறது. ஆனால், 7,500 பேருக்குத்தான் சிறுநீரகம் கிடைக்கிறது.

இந்தச் சூழலில் அமெரிக்காவிலிருந்து செயற்கைச் சிறுநீரகம் (Bio artificial kidney) கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஒரு புதிய செய்தி வந்துள்ளது. செயற்கைக் கால், செயற்கைக் கண், செயற்கைக் கணையம்ஞ் இந்த வரிசையில் இப்போது செயற்கைச் சிறுநீரகம். இது நடைமுறைக்கு வருமானால் லட்சக்கணக்கான சிறுநீரக நோயாளிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

**செயற்கைச் சிறுநீரகம் எப்படி வேலை செய்கிறது?:** சான்பிரான்சிஸ்கோவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக அறிவியலாளர்கள் இதைக் கண்டுபிடித்துள்ளனர். சிலிக்கான் நானோ தொழில்நுட்பத்தில் இது இயங்குகிறது. இதில் மின் வயர்கள், பேட்டரி என்று எதுவுமில்லை. அலைபேசி பேட்டரி அளவில் உள்ள இந்தக் கருவியைப் பயனாளியின் வயிற்றுக்குள் பதித்து, ஒரு முனையை அவரது ரத்த ஓட்டத்திலும் மறுமுனையை சிறுநீர்ப்பையுடனும் இணைத்துவிடுகின்றனர். ரத்த அழுத்தம் தரும் விசையில் இது இயங்குகிறது.

இதில் இரு பகுதிகள் உள்ளன. 'ஹீமோஃபில்டர்' எனும் ரத்த வடிகட்டி ரத்தத்தில் இருக்கும் அசுத்தங்களை முதலில் பிரித்து எடுத்துவிட்டு, அதனோடு இணைந்த 'பயோரியாக்டர்' எனும் பகுதிக்கு அதை அனுப்பிவிடுகிறது. இதில் ஆய்வுக்கூடங்களில் வளர்க்கப்பட்ட சிறுநீரக செல்கள் இருக்கின்றன. அவை அந்த ரத்தத்திலிருந்து உடலுக்குத் தேவையான தண்ணீர், குளுக்கோஸ், சில உப்புகளை மறுபடியும் உடலுக்குள் கொண்டு சென்றுவிடுகின்றன. மிச்சமுள்ளதை மட்டும் சிறுநீர்ப்பைக்கு அனுப்பி சிறுநீராக வெளியேற்றுகின்றன.

பொதுவாக, செயற்கைச் சிறுநீரகம் போன்ற கருவிக்குள் ரத்தம் செல்லும்போது ரத்தம் உறைந்துவிடும். இதுவரை இதுதான் இந்தக் கண்டுபிடிப்பில் பெரிய பிரச்சினையாக இருந்தது. இப்போது வந்துள்ள சிலிக்கான் நானோ தொழில்நுட்பம் இந்தச் சிக்கலைத் தீர்த்துள்ளது. இந்தப் புதிய கருவியில் ரத்தம் உறையவில்லை என்பது முக்கியமான திருப்பம். இதுவரை இந்தக் கருவி பொருத்தப்பட்ட அனைவரும் நலமாக உள்ளனர். அடுத்த ஆண்டில் இது மருத்துவச் சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நிஜமானால், நாட்பட்ட சிறுநீரக நோயாளிகளுக்கு ஆயுளை நீடிக்கும் அற்புதமான கண்டுபிடிப்பாக இருக்கும்.

**- V. அருணாச்சலம்**

# முதல்வரின் சிறப்பு குறைதீர்க்கும் திட்டம்

## செயல்படுத்தப்படுமா?

தமிழக சட்டப்பேரவை விதி எண்.110-ன் கீழ் முதல்வர் எடப்பாடி பழனிசாமி சட்டப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்புகள்: நூறாண்டுகள் நிறைவு செய்யும் விழுப்புரம் நகராட்சிக்கு 50 கோடி ரூபாய் செலவில் மேம்பாட்டுப் பணிகள் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் சர்வதேச மலர் ஏல மையம், 20 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். சர்வதேச அளவில் கொள்முதல் செய்ய ஏதுவாக, மின்னணு வசதியுடன் கூடிய ஏலக்கூடம், சிப்பம் கட்டும் கூடம், அலுவலகக் கட்டடம், தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம், குளிர்பதன அறை போன்ற வசதிகளுடன் இம்மையம் உருவாக்கப்படும். மலர்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு அதிக வருமானம் ஈட்டித் தருவதுடன், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, அந்நிய செலாவணியையும் அதிகரிக்கும்.



தற்போது பெரிய மாவட்டங்களாக உள்ள திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள், நிர்வாக வசதிக்காக திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்படும். காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பிரித்து செங்கல்பட்டை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்படும். இவ்விரு மாவட்டங்களுக்கும் தலா ஒரு இந்திய ஆட்சிப் பணி அதிகாரி தனி அதிகாரியாக நியமிக்கப்படுவர்.

ஒரு சிறப்பு குறைதீர்க்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தும். இத்திட்டத்தின் மூலம் நகரங்களில் வார்டுகளிலும், கிராமங்கள் தோறும் நேரடியாக சென்று மனுக்களை பெற்று, தீர்வு காண, முதல்வரின் சிறப்பு குறை தீர்வு திட்டத்தை ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஆரணி மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள திருமங்கலம் கோட்டங்களுக்கு 6.26 கோடி ரூபாய் செலவில் புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலக மற்றும் குடியிருப்பு கட்டடங்களும், நாமக்கல் மாவட்டத்தில் மோகனூர், திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன்விளை, மதுரை மாவட்டத்தில் கள்ளிக்குடி, தூத்துக்குடி மாவட்டத்தில் ஏரல், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆர்.எஸ். மங்கலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைமலை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அஞ்செட்டி, கன்னியாகுமாரி மாவட்டத்தில் திருவட்டார் மற்றும் கிள்ளியூர், திண்டுக்கல் மாவட்டத்தில் குஜிலியம்பாறை, திருவள்ளூர் மாவட்டத்தில் ஆர்.கே.பேட்டை, விருதுநகர் மாவட்டத்தில் வத்ராயிருப்பு மற்றும் கரூர் மாவட்டத்தில் புகளூர் ஆகிய 13 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அலுவலக மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் 60.18 கோடி ரூபாய் செலவிலும், ஆக மொத்தம் 66.44 கோடி



ரூபாய் செலவில் மேற்கண்ட கட்டடங்கள் கட்டப்படும்.

கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், சூரிய ஒளியில் செயல்படும் மீன் உலர் கூடங்கள் அமைக்கவும், மீன்வள சூழலை மீள ஏற்படுத்த செயற்கை உறைவிடங்கள் அமைக்கவும், கடல் / உவர் நீர் மீன் குஞ்சு வங்கி அமைக்கவும், ஒருங்கிணைந்த கடல் மீன் வளர்ப்பு அலகுகள் அமைக்கவும், மீனவ மக்களின் மாற்று வாழ்வாதாரத்திற்காக மெல்லுடலிகள் மற்றும் கடற்பாசி வளர்ப்பு அலகுகள் ஏற்படுத்தவும், மீனவ இளைஞர்களுக்கு நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தவும், 31.15 கோடி ரூபாய் செலவில் வழிவகை செய்யப்படும்.

மேம்படுத்தப்பட்ட 29 நகரங்களில், வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைகளைப் போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, மறு நில அளவை பணிகள் 30.29 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு, 3 தொகுதிகளாக 3 ஆண்டுகளுக்குள் முடிக்கப்படும்.

அனைத்து பழங்குடியின மக்கள் சொந்த வீட்டில் குடியிருப்பதை உறுதி செய்ய வீடுகள் கட்டித் தருதல், அவர்களின் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருதல், இணைப்பு சாலைகள் மற்றும் பாதைகள் இல்லாத இடங்களில் இணைப்பு சாலை மற்றும் பாதை அமைத்துத் தருதல், தெரு விளக்கு மற்றும் சூரிய மின் விளக்கு வசதி ஏற்படுத்தி தருதல் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் முதற்கட்டமாக 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தித் தரப்படும்.

நடப்பு கல்வியாண்டில் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள எழுத்தூர் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள பாச்சேரி, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள அரசவெளி மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பொக்காப்புரம் ஆகிய 3 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள இன்னாடு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் 6.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலை உயர்த்தப்படும்.

ஆதிதிராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை அனைத்து வசதிகளுடன் மகிழ்ச்சியாகவும், மிகச் சிறப்பாகவும் கொண்டாடும் வகையில், மதுரை மாவட்டம்-கே.புளியங்குளம், கரூர் மாவட்டம்-வாங்கல் குச்சிபாளையம், தருமபுரி மாவட்டம் - காரிமங்கலம், நாமக்கல் மாவட்டம் - 82 கவுண்டம்பாளையம், திருநெல்வேலி மாவட்டம் - ரெங்கசமுத்திரம் ஆகிய 5 கிராமங்களில், அனைத்து வசதிகளுடன் கூடிய 5 சமுதாயக் கூடங்கள், தலா 1 கோடி ரூபாய் வீதம், 5 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும். இவ்வாறு முதல்வர் சட்டப்பேரவையில் வெளியிட்டார்.

**- கனகதுர்கா**

# இந்திக்காரனுக்கு
# அடிமையாகப்போகிறதா தமிழகம்!

தொழில் முனைவோர் சூழலை மேம்படுத்தும் விதமாக நகரத்தார் சேம்பர் ஆப் காமர்ஸ் நடத்தும் 4வது சர்வதேச வர்த்தக மாநாடு கிண்டியில துவங்கியது. 2 நாட்கள் நடக்கும் இந்த மாநாட்டிற்கு பழனியப்பன் தலைமை வகித்தார். செயலாளர் வெங்கட் அண்ணாமலை, பொருளாளர் ராம் வெங்கட் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



இந்த கருத்தரங்கில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டு விழாவினை தொடக்கி வைத்து பேசியதாவது: தென்கிழக்கு ஆசியாவில் பல பகுதிகளில் அந்த நாட்டின் சின்னங்கள், கலாச்சாரங்கள் அந்த பகுதி நகரத்தார் மூலம் உருவாக்கப்படுகிறது. காசி விஸ்வநாதர் கோவிலை புணரமைத்தது தமிழர்கள் தான். நம் தலைமுறைக்கு பண்பும்,




பண்பாட்டை கற்றுக்கொடுக்க வேண்டிய கடமையும் நமக்கு உள்ளது. பிரதமர் மோடி சொல்வது போல் நம்மிடம் அனைத்து வகையான திறமைகள் இருப்பதால்தான் அடுத்து வரும் தலைமுறைக்கு விஷ்வ குருவாக விளங்க முடிகிறது. நம் நாட்டில் கல்வி, தொழில் திறன் ஆகியவற்றில் அரசு முன்னிலையில் இருக்கிறது.

இயற்கையாகவே நம் மரபணுவில் அந்த திறன் இருக்கிறது. நாட்டில் உள்ள அனைத்து தொழில் புரிபவர்கள் சட்டதிட்டங்களை மதித்து அதன் வழியே செல்வதால் தான் நம் திறமைகளை அனைவருக்கும் தெரியும் வகையில் வெளிக்கொண்டு வர முடிகிறது. வரி உள்ளிட்டவற்றை கவனமாக கையாள்வது மூலமும் நம் திறமை வெளிப்படும். தொழில் செய்ய அரசு உதவி பற்றி பேசுவதை விட, அரசுடன் இணைந்து முறையான தொழில் பயிற்சியை மேற்கொள்வதே சிறந்தது.

இந்தியாவின் வளர்ச்சிக்கு இளைஞர்கள் தொழில் செய்வது மிக முக்கியமான ஒன்றாகும். இந்த பட்ஜெட்டில் தொழில் முறைவோருக்கு அதிகளவு பயன்கள் இடம் பெற்றுள்ளது. விவசாயம் குறித்து சுதந்திர நாட்டில் யார் வேண்டுமானாலும் கருத்து சொல்லலாம். கல்வியிலும், வேலை வாய்பிலும் என எதிலும், எங்கும் இந்தி திணிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. மோடி அரசில் ஸ்ரேஷ்ட பாரத் என்ற நிகழ்ச்சி மூலம் வட மாநிலத்திலும் தமிழ் கற்றுத்தரபடுகிறது. இவ்வாறு கூறினார்.

**- M. தரணி**

# பாதுகாப்பற்ற லஞ்சப் புகார்

# விழிப்புணர்வில்லாத மக்கள்

பிறப்புச் சான்றிதழ் முதல் இறப்புச் சான்றிதழ் வரை, லஞ்சம் கொடுத்துத்தான் வாங்க வேண்டிய அவல நிலை தொடர்கிறது. லஞ்சம் இல்லாமல் அரசு அலுவலகங்களில் சான்றிதழ் வாங்குவது இன்றைய நாளில் குதிரைக்கொம்பு. சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் கொண்டு வந்தாலும் லஞ்சம், ஊழல் குறைந்தபாடில்லை. காலத்திற்கு ஏற்ப இவை இரண்டும் வெவ்வேறு வடிவில் பரிணாம வளர்ச்சி அடைந்து வருகிறது. எனவே, இவற்றை ஒழிப்பதில் பெரும் சவால் ஏற்படுகிறது.

வழக்கு ஒன்றை விசாரித்த ஐகோர்ட் மதுரை கிளை, ''சென்னை, மதுரை மாநகராட்சி அலுவலகங்கள் லஞ்சம், ஊழலில் திளைக்கின்றன. தமிழகம் ஊழல் மிகுந்த மாநிலமாக உள்ளது. ஊழலில் ஈடுபடும் பொது ஊழியரை சமூக விரோதியாக அறிவிக்கலாம்...'' என அதிரடியாக கருத்து தெரிவித்தது. அரசு சேவைகளை சாமானிய பொதுமக்கள் பெறுவதில் நடைபெறும் ஊழல் குறித்து கடந்த ஆண்டு நடந்த ஆய்வில், தமிழகம் முதலிடம் பெற்றதை எளிதில் மறந்து, கடந்து விடமுடியாது. இந்தப் பிரச்னைக்கு எப்படி தீர்வுகாண்பது?

லஞ்சம் குறித்து புகார் அளிப்போருக்கு உரிய பாதுகாப்பு கிடைக்கும் என்பதை முதலில் உறுதி செய்யவேண்டும். அப்படி செய்தால் எங்கெல்லாம் லஞ்சம் தலைதூக்கியுள்ளது என்பது குறித்த புள்ளிவிவரங்களுடன் அதிகளவில் புகார்கள் குவியலாம். அந்த புகார்களின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். லஞ்சம் கொடுத்தால் / வாங்கினால் சட்டப்படி தண்டிக்கப்படுவோம் என்ற அச்சம் மனதில் பதிந்தால் தான் இந்தப் பிரச்னையை ஓரளவுக்காவது ஒழிக்க முடியும்.

கணினிமயமாக்கல், ஆன்லைன் முறை உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளை அறிமுகப்படுத்தினாலும் ஊழல் குறையவில்லை என்பது வேதனைக்குரிய விஷயம். எளிதாக காரியம் முடிந்து விடுகிறது என்பதற்காக ஒரு சிலர், சம்பந்தப்பட்ட துறையினருக்கு லஞ்சம் கொடுக்கின்றனர். இதனால் நேர்மையான முறையில் சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்கள் வாங்க வேண்டும் என நினைப்பவர்களிடம், அதிகாரிகள் லஞ்சத்தை எதிர்பார்க்கின்றனர்.



சார் பதிவாளர் அலுவலகம், காவல் துறை, மாநகராட்சி என பல்வேறு துறைகளில் லஞ்சம் தலைதூக்கி உள்ளது. தமிழகத்தில் அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கக்கூடிய துறைகளில் சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் ஆர்டிஓ அலுவலகங்களில் புரோக்கர்களின் ஆதிக்கம் தான் அதிகமாக உள்ளது. சில அதிகாரிகள் நேரிடையாக லஞ்சம் வாங்காமல், புரோக்கர் கள் மூலமே வாங்குகின்றனர். அதனால் லஞ்ச வழக்குகளில் கீழ்மட்ட அதிகாரிகள், புரோக்கர்கள் மட்டுமே சிக்குகின்றனர்.

லஞ்சம், ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வை அரசு அதிகப்படுத்த வேண்டும். இவற்றை ஒழிப்பது நம் ஒவ்வொருவரின் கடமை. மக்களை விட அதிகாரிகளுக்கு அந்த பொறுப்பு அதிகம் வேண்டும். தேசம் மற்றும் மாநிலத்தின் வளர்ச்சிக்கு திறமையான, நேர்மையான அரசு அலுவலகங்கள் தேவை. அதிலும், லஞ்சத்தை வெறுக்கும் மனப்பான்மை தேவை; அப்போது தான் லஞ்சத்தை வேரறுக்க முடியும்.

**- S. சரவணன்**



# சிந்தனை முத்துக்கள்





உன்ன 10,000 ரூபாய் குடுத்து வாங்குனதுக்கு..
உன்னால என்ன எவ்வளவு கெடுக்க முடியுமோ, அவ்வளவு நல்லா கெடுத்து வச்சிருக்க





தாம்பரத்தில்
இருசக்கர வாகனத்தை திருடியவர் கைது
'ஜெயிலில் சாப்பாடு கிடைக்கும் என்பதால் திருடியதாக வாக்குமூலம்'





வீட்டுக்குள்ள குளத்தை கட்டுறவன் வெளிநாட்டுக்காரன்
குளத்துக்குள்ள வீட்டை கட்டுறவன் தமிழ்நாட்டுக்காரன்




பெரியாரை பற்றி படித்தவனிடம் மகாபாரதத்தை பற்றி கேட்டால் குழந்தையாய் இருக்கும்போது கிருஷ்ணன் கோபியர்களின் சேலையை எடுத்து கொண்டு ஓடினார்னு சொல்லுவான்
விவேகானந்தரை பற்றி படித்தவனிடம் மகாபாரதத்தை பற்றி கேட்டால் கிருஷ்ணன் திரௌபதிக்கு சேலையை குடுத்து உதவினார்னு சொல்லுவான்
நீதி நீ யாரை பின் பற்றுகிறாயோ அப்படி தான் உன் எண்ணமும் இருக்கும்

உன் பணத்தை எடுடா
நான் ஒரு மந்திரி
அப்படீன்னா என் பணத்தை கொடுடா

எங்களுக்கு ஹிந்தி சொல்லி தருவதை விட்டு விட்டு
ஹிந்தி காரனுக்கு Train Reservation Seat-னா என்னனு சொல்லி குடுங்கடா புண்ணியமா போகும்..
நாங்க புக் பண்ணுன சீட் ல அவன் படுத்துகிட்டு, எங்க உயிர வாங்குறான்




தண்ணிக்குள்ள இருந்ததால தான் அத்திவரதர் இப்ப இங்க இருக்காரு...!
இல்லன்னா பொன் மாணிக்கவேல் அத்தி வரதர தேடி அலைஞ்சிட்டு இருந்துருப்பாரு..





மரம்
தன்னை வளர்த்த மண்ணை காக்க
உயிர் போகும் தருவாயிலும் போராடுகிறது....
நாம்
மரம் நடுவோம்
மரம் ...

அறிமுகமில்லாதவர்களின் திறமை பாராட்டப்பட வைக்கிறது!
அருகில் இருப்பவரின் திறமை பொறாமைப்பட வைக்கிறது!
வியப்பில் ஆழ்த்துவதே
மனிதரின் குணமாகும்!
























காதலன் : எப்படி இருக்க..
காதலி : நல்லா இருக்க
காதலன் : ம்ம்.. சாப்பிட்டயா..
காதலி : why you always asking these type of silly questions..!!
காதலன் : Okay... then what is your openion about the liberalisation of indian economy and foreign investment in the defense sector and railway ??
காதலி : நான் தோசையும் சட்னியும் சாப்பிட்டேன்.. நீ..

# வேலையில்லா பட்டதாரிகள் அதிகமா?

## அதிர்ச்சி தகவல்!

வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் கடந்த ஓர் ஆண்டில் 3,948 பேர் மட்டும் பொதுத்துறையில் பணி பெற்றுள்ளனர். ஆனால் 24 லட்சம் பேர் வேலைக்காக பதிவு செய்துள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. தமிழகத்தில் வேலைவாய்ப்பு துறையின் கீழ் 34 மாவட்டங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செயல்பட்டுவருகிறது.

இந்த வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் கல்விதகுதிகளை இணையதளம் மூலம் பதிவு செய்தல், வேலையளிப்பவர்களுக்கு மனுதார்களை பரிந்துரைத்தல் செய்தல், இளைஞர்களுக்கு தேவையான தொழில் நெறி வழிகாட்டுதல் வழங்குதல், போட்டித் தேர்வுகளில் பங்கேற்பவர்களுக்கு கட்டணமில்லா பயிற்சி வழங்குதல், தன்னார்வ பயிலும் வட்டங்களை உருவாக்குதல், அயல் நாட்டு வேலை வாய்ப்பிற்கு பதிவு செய்தல், திறன் பயிற்சிக்கு பதிவு செய்தல் மற்றும் வழி காட்டுதல், வேலைவாய்ப்பு முகாம் களை நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை வேலைவாய்ப்பு அலுவல கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருக்கும் மனுதாரரர்களுக்கு பதிவுமூப்பு அடிப்படையில் பொதுத் துறை மற்றும் தனியார் துறையில் பணிவழங்கும் பணியையும் வேலை வாய்ப்பு துறை செய்துவருகிறது.

அதன்படி கடந்த 2011 ம் ஆண்டு முதல் 2019 ம் ஆண்டு வரை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் 89 ஆயிரத்து 755 பேர் பொதுத் துறையில் பணிநியமனம் பெற்றுள்ளதாக தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை கொள்கை விளக்க குறிப்பேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த 2018 ம் ஆண்டு ஜனவரி முதல் கடந்த மார்ச் மாதம் வரை 3 ஆயிரத்து 948 பேர் மட்டுமே பொதுத்துறையில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

இதைப்போன்று தனியார் துறை வேலைவாய்ப்புகளை அதிகரிக்க ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் “வேலை வாய்ப்பு வெள்ளி” என்ற பெயரில் சிறிய





மற்றும் பெரிய வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. இந்த வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் கடந்த 2018ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2019ம் ஆண்டு மார்ச் வரை 85 ஆயிரத்து 756 பேர் தனியார் துறையில் பணி நியமனம் பெற்றுள்ளனர் என்று வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் நலத்துறை கொள்கை விளக்க குறிப்பேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 24 முதல் 58 வயதுக்குட்பட்ட 27 லட்சத்து 41 ஆயிரத்து 521 வேலைதேடுபவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருக்கின்றனர்.

ஜனவரி 2018 முதல் மார்ச் 2019 வரை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் 170 மாற்றுத்திறனாளிகள் மட்டுமே பொதுத் துறை மூலம் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இந்த காலகட்டத்தில் 1456 மாற்றுத்திறனாளிகள் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். ஆனால் 1 லட்சத்து 29 ஆயிரத்து 818 மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்து கொண்டு உள்ளனர்.

- S. ராம்குமார்


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

**மக்கள் விசாரணை** ®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

**ஆண்டு-8 இதழ்-3 ஆகஸ்ட்-2019**

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V. அருணாச்சலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன்**, M.A.,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ராம்குமார் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
A.பாலகிருஷ்ணன் கோவை, நாகராஜ் மூணாறு
R.ஜெயா தென்சென்னை, K.அழகர்சாமி வட சென்னை
S.ரமேஷ் காஞ்சி, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை
சுசி ஈஸ்வர் விருதுநகர், N.சிலம்பரசு தர்மபுரி
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, குருபாலகிருஷ்ணன்

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்
B.நாராயணசாமி, நீலகண்டன், N.சீனிவாசன்
R.பார்த்தசாரதி, G.ஆனந்த்குமார், S.மோகன்

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# பயிர் காப்பீடு திட்டத்தில் இணையும் விவசாயிகளிடம் கோடிக்கணக்கில் பிரீமியம் வசூல்!

விவசாயிகளுக்கு நெருக்கடியான நேரங்களில் உதவுவதற்காக உருவாக்கப் பட்டது பயிர் காப்பீடு திட்டம். தேசிய வேளாண் காப்பீடு திட்டம் எனும் பெயரில் செயல்பட்டு, பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டமென தற்போது நடைமுறையில் உள்ளது. ஆனால், பயிர் காப்பீடு திட்டம் விவசாயிகளுக்கு முழுமையான பயன்தரவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், வணிக தோட்டப்பயிர்கள் என அனைத்து விதமான உணவு பயிர்களுக்கும், மகசூல் இழப்பை மதிப்பிட்டு நிவாரணம் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கம்.

தமிழகத்தில், சொர்ணவாரி நெற்பயிர் மற்றும் இதர காரீப் பருவ பயிர்களை பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. காப்பீட்டுத் தொகையில் 2 சதவீதம் மட்டும் அதாவது நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.554ம் இதர காரீப் பருவ பயிர்களான மக்காச்சோளம் ரூ.330, மணிலா ரூ.480, சோளம் ரூ.196, கம்பு ரூ.198, சாமை ரூ.159, எள் ரூ.180 என காப்பீட்டு கட்டணமாக விவசாயிகள் செலுத்த வேண்டும்.

வங்கிகளில் கடன் பெறும் விவசாயிகளுக்கு, காப்பீடு செய்வது கட்டாயம். மற்ற விவசாயிகள் அதற்கான முகவர்கள் அல்லது பொது சேவை மையங்களில் காப்பீடு செய்து கொள்ளலாம். வேளாண் காப்பீடு திட்டத்தில் இணைந்து, பிரீமியம் தொகை செலுத்தியிருந்தாலும், விவசாயிகள் தனி நபர் பயிர் பாதிப்புக்கு இழப்பீடு தொகை பெற முடிவதில்லை. வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட வட்டாரம்(யூனியன்) அல்லது உள்வட்டம்(பிர்கா), வருவாய் கிராமம் என அரசால் தேர்வு செய்யப்படும் பகுதியில், சம்மந்தப்பட்ட விவசாயி இடம்பெற்றிருந்தால் மட்டுமே இழப்பீடு கிடைக்கும் நிலை உள்ளது.

வறட்சியால் பாதிக்கப்படும் ஒவ்வொரு விவசாயினுடைய பயிர் பாதிப்பை தனித்தனியே மதிப்பிட்டு இழப்பீடு தருவதில்லை. அந்த வட்டாரத்துக்கு என மதிப்பிடப்படும் தொகையையே அந்த பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளும் பெற்றுக்கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் ஒரு ஏக்கர் நெற்பயிர் பாதிப்புக்கு, ஆயிரம் இழப்பீடு வழங்கிய நிலையும் இருந்தது.



பயிர் காப்பீடு திட்டத்தில் சேரும் விவசாயிகளிடம் இருந்து ஒவ்வொரு பயிர் பருவத்திலும் கோடிக்கணக்கான ரூபாய் காப்பீட்டு பிரிமியம் தொகையை வசூலிக்கப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் சில லட்சங்கள்கூட இழப்பீடாக கிடைப்பதில்லை. காப்பீடு பெறும் இரண்டு இன்சூரன்ஸ் நிறுவனங்கள் ரூ.10 ஆயிரம் கோடி வரை லாபம் அடைந்திருக்கிறது. விவசாயிகளுக்கு எந்த பயனும் இல்லை என விவசாய சங்கங்கள் வெளிப்படையாக குற்றம் சாட்டியிருக்கின்றன.




இழப்பீடு குறித்த புகார்களை சம்பந்தப் பட்ட இன்சூரன்ஸ் நிறுவனங்கள் ஏற்பதில்லை. வேளாண் அதிகாரிகளும் தட்டிக் கழிக்கின்றனர். எனவே, பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்தும் பயனில்லை என விவசாயிகள் வேதனைப்படுகின்றனர். வங்கிகளில் பயிர் கடன் பெறும் விவசாயி களை, காப்பீடு திட்டத்தில் சேர நிர்பந்திக்கின்றனர். அதேபோல், வேளாண் துறையின் எந்த திட்டத்திற்கு விண்ணப்பித் தாலும், காப்பீடு திட்டத்தில் சேர வேண்டும் என்பது கட்டாயம். எனவே, கிடைக்காத இழப்பீடுக்கு, காப்பீடு தொகை செலுத்தும் நெருக்கடி விவசாயிகளுக்கு ஏற்படுகிறது.

எனவே, வேளாண் சாகுபடி பாதிப்பு ஏற்பட்டால், சம்மந்தப்பட்ட விவசாயி தனி நபராக இழப்பீடு பெறும் வகையில் பயிர் காப்பீடு திட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும். மேலும், பயிர் சேதத்திற்கு சந்தை மதிப்பை கணக்கிட்டு, அதிகபட்ச இழப்பீடு வழங்க வேண்டும். இழப்பீடு தொகையை உயர்த்திக் கேட்கும் வகையில் மேல்முறையீடு செய்யும் வாய்ப்பை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். தமிழகம் முழுவதும் தற்போது கடும் வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மழையை நம்பி சாகுபடி செய்த நெல், கரும்பு, வாழை, மணிலா போன்ற பயிரெல்லாம் பாழாகிவிட்டது. எனவே, இனிவரும் காலங்களில், பயிர் காப்பீடு திட்டம் விவசாயிகளுக்கு பாதுகாப்பான திட்டம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது அவசியமாகும்.

வறட்சியால் பயிர் பாதிப்பு ஏற்படும் காலங்களில், வேளாண் துறையினர் கள ஆய்வு நடத்தி, கடந்த மூன்று அல்லது ஐந்து ஆண்டுகால உத்திரவாத மகசூலோடு ஒப்பிட்டு, நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறது என கணக்கிட்டு, காப்பீட்டு தொகைக்கு பரிந்துரைக்கின்றனர். ஆனால், அதிகாரிகள் முறையாக பயிர் பாதிப்பை கணக்கிடுவதில்லை. கள ஆய்வுக்கு செல்லாமல், உட்கார்ந்த இடத்திலேயே புள்ளி விபரங்களை பெறுகின்றனர். அதிகாரிகளின் தவறான விபரங்களின் அடிப்படையில் நிவாரணம் வழங்குவதால் விவசாயிகள் பாதிக்கின்றனர்.



பயிர் காப்பீடு திட்டத்தின் மூலம், நாடு முழுவமுதும் விவசாயிகளிடம் இருந்து பல்லாயிரம் கோடி ரூபாய் பிரீமியமாக வசூலிக்கப்படுகிறது. அதன்மூலம், விவசாயி களுக்கு கிடைத்த பயன் என்ன என்பது கேள்விக்குறியாக உள்ளது. எனவே, விவசாயி களின்ல் விவசாயிகளின் பங்களிப்பு தொகை, வழங்கப்பட்ட காப்பீடு தொகை போன்ற விவரங்களை மாவட்டம் வாரியாக அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். காப்பீடு செய்தால், பாதிப்பு காலத்தில் பயன்கிடைக்கும் என்பதை அரசு உறுதிப் படுத்த வேண்டும்.

**- B. நாராயணசாமி**



முனைவர் ஆ.மவுரியன்



வீர தமிழச்சிகளின் வரலாறு..!

(22)

பாரதத்தாயின் மூத்த மகள் வீரத்தியாகி

# சொர்ணத்தம்மாள்

**சுதந்திர போராட்டத்தில் அடி, உதை, சிறை, சித்ரவதை, அவமானத்தையும் அனுபவித்தவர்**

**பேட்டியில் தனது சுதந்திரப்போராட்ட வாழ்க்கை குறித்து சொர்ணத்தம்மாள் கூறுகையில்...**

"அவர் என்னைத் திருமணம் செய்வதற்கு முன்னரே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு ஜெயிலுக்குப் போய் வந்தார். அப்படி நான்கு முறை அவர் ஜெயிலுக்குப் போனார். நீங்கள் மட்டும் போகிறீர்கள். நான் ஜெயிலுக்குப் போகவேண்டாமா எனக் கேட்டேன். சிரித்துக் கொண்டே என்னையும் அழைத்துக் கொண்டு போராட்டத்துக்குப் போனார். அந்த காலத்தில் "வந்தே மாதரம்" என்று சொன்னால் போலீஸ்காரர்கள் அடிப்பார்கள்.

நாங்கள் அப்போது மதுரை சௌராஷ்டிரா ஹைஸ்கூல் பின்புறம் உள்ள வாலண்டியர் சந்தில் குடியிருந்தோம். மறியலுக்குப் போனபோது அவரையும் என்னையும் கைது செய்து ஜெயிலில் அடைத்தார்கள். ஒரு வாரத்துக்குப் பிறகு விட்டுவிட்டார்கள். மீண்டும் மறியல் செய்தோம். மீண்டும் கைது செய்து மதுரை ஜெயிலில் ஒரு மாதம் அடைத்து விட்டார்கள். அவரும் நானும் மாறி மாறி சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டு ஜெயிலுக்குப் போனோம்.

மூன்றாவது முறையாக மறியல் செய்தபோது என்னை கைது செய்து வேலூர் சிறையில் ஆறு மாதங்கள் சிறையில் அடைத்தனர். நான்காவது முறையாக மதுரை விளக்குத்தூண் பகுதியில் மறியல் செய்தபோது தீச்சட்டி கோவிந்தன் என்ற போலீஸ் அதிகாரி என்னை கைது செய்து ஒன்றாம் நம்பர் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் வைத்தார். சிறிது நேரத்தில் லட்சுமி பாய் அம்மாவையும் கைது செய்து கொண்டு வந்தனர்.

தீச்சட்டி கோவிந்தன் என் கதர் சேலையைச் சுட்டிக்காட்டி "யார் வாங்கிக் கொடுத்தது?" உன்னை யார் மறியல் செய்யச் சொன்னது " எனக் கேட்டார். "யாரும் சொல்லல்ல. வெள்ளைக்காரன் நம்ம நாட்டைவிட்டு வெளியேறவேண்டும். நமக்கு விடுதலை வேண்டும்" என்று சொன்னேன். தடியால் அடித்தார். இரவு 11 மணி வரை போலீஸ்காரர்கள் என்னை அடித்தனர்.

"உண்மையைச் சொல் உனக்கு சோறு போடுகிறோம்.." என்றனர். "உங்கள் சாப்பாடு வேண்டாம் நாட்டுக்கு சுதந்திரம் வேண்டும்" என்றேன். நீ கட்டியிருக்கிற சேலையைக் கொடு எனச் சொல்லி அடித்தனர். தடியால் என் காதில் அடித்தபோது காது மடல் கிழிந்து

ரத்தம் வந்தது. அன்றிலிருந்து எனக்கு காது சரியாகக் கேட்காது.

ஒரு கட்டத்தில் என் சேலையை பிடித்து இழுத்தனர். நான் அதைத் தடுத்ததோடு அவர்களிடமிருந்து தப்பிக்க முயற்சித்தேன். பெல்ட்டாலும், லத்தியாலும் செருப்பாலும் அடித்தார்கள். நான் அடிதாங்காமல் விழுந்துவிட்டேன். நான் அணிந்திருந்த கதர் சேலையை அவிழ்த்துவிட்டு நீளம் குறைந்த சேலையைத் தந்தார்கள். அதனால் உடலை முழுமையாக மறைக்கமுடியாது.

அதை கட்டிக்கச் சொல்லி என்னையும் லட்சுமி பாயையும் ஒரு போலீஸ் லாரியின் ஏற்றினர். டிரைவர் உட்பட பதிமூன்று போலீஸ்காரர்கள் அதில் இருந்தனர். ஜெயிலில் அடைக்கப்போகிறோம் எனச் சொன்னார்கள். ஆனால் ஜெயிலுக்குப் போகாமல் பல சந்துகள், இருட்டான பகுதி வழியாக போலீஸ் லாரி சென்றது. துக்கம் தாங்காமல் லட்சுமிபாய் அம்மா அழுதார். எனக்கு பயமாக இருந்தது. லாரி போய் கொண்டே இருந்தது.

லாரியின் டிரைவர், போலீஸ்காரர் ஒருவரிடம் "எங்க நிறுத்துவது" என்று கேட்டார். அதற்கு அவர் பனிரெண்டு மைல் போகட்டும் என்றார். அப்போது இரவு ஒரு மணி இருக்கும்.



வயலும் காடும் போன்ற இடத்தில் லாரியை நிறுத்தி எங்களை இறங்கச் சொன்னார்கள். இறங்கினோம். அப்போது ஒரு போலீஸ்காரரர் என்னிடம் "சுயராஜ்யம் வேண்டும் சுயராஜ்யம் வேண்டும் எனக் கேட்பீர்களே இந்த பாதை வழியாக போ.. சுயராஜ்யம் கிடைக்கும்" எனக் கிண்டலாகச் சொன்னார். அப்போது



நான், "சுதந்திரத்துக்காக எந்தப் பாதையில் போகவேண்டும் என்று என்பது எங்களுக்குத் தெரியும். நீங்கள் போங்கள். உங்கள் வேலை முடிந்தது.." என்றேன். அதற்கும் என்னை அடித்தார்கள். அங்கேயே எங்களை விட்டுவிட்டு லாரி திரும்பி விட்டது.

அரைகுறை ஆடையுடன் அந்த இடத்திலிருந்து தட்டுத்தடுமாறி நடந்துவர ஆரம்பித்தோம். ஒரே இருட்டாக இருந்தது. ஆள் நடமாட்டம் இல்லை. வீடுகளும் இல்லை. ஒரு மைல் தூரம் சென்றிருப்போம். அப்போது ஒரு பையனும் இரண்டு பெண்களும் எங்களை வழியில் பார்த்தனர். எங்கே போகிறீர்கள் எனக் கேட்டார்கள். சொன்னோம். எங்களை ஒரு குடிசைக்கு கூட்டிட்டு போனார்கள். எங்களை சாப்பிடச் சொன்னார்கள். படுக்கத் தலையணை கொடுத்தார்கள். ஒன்றும் வேண்டாம் எனக் கூறிவிட்டோம். என்ன செய்வதென்றே தெரியவில்லை.

எங்களை ஏற்றி வந்த லாரி டிரைவர் நல்லவராக இருந்திருக்கிறார். அவர் எங்களை இறக்கிவிட்ட விஷயத்தை மதுரை மாவட்ட காங்கிரஸ் தலைவர் முத்துக்கனித் தேவரிடம் போய் சொல்லியிருக்கிறார். அவர் கட்சிக்காரர்கள் சிலரிடம் இரவோடு இரவாக எங்களைத் தேடியிருக்கிறார்கள். கடைசியில் நாங்கள் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து எங்களைக் கூட்டிச் சென்றார்கள்.

**மதுரை கீழ்பாலத்தில் இறங்கி வைகை ஆற்றில் குளித்துவிட்டு புதிய சேலையைக் கட்டிக்கொண்டோம். அங்கிருந்து குதிரை வண்டியில் மதுரை புதுமண்டபத்திற்கு கூட்டிச் சென்றார்கள்.**

**- தொடரும்**

# காற்றில் பறக்கும் கல்வி கொள்கை!

தமிழ்நாட்டில் 37 ஆயிரத்து 211 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 2 லட்சத்து 60 ஆயிரம் ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். அரசு பள்ளிகளில் ஆண்டுதோறும் மாணவர் சேர்க்கை குறைந்து வருவதால், உபரி ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது. உபரி ஆசிரியர்களை கணக்கெடுத்து, பணி நிரவல் மூலம் வேறு பள்ளிகளுக்கு இடமாற்றம் செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

உபரி ஆசிரியர்கள் கணக்கெடுப்பு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்தது. இதில், 16 ஆயிரத்து 110 ஆசிரியர்கள் உபரியாக இருப்பதாக தெரியவந்தது. இவர்களில், 14 ஆயிரம் பேர் பட்டதாரி ஆசிரியர்கள். இதில், பணி நிரவல் மூலம் 4 ஆயிரம் பேரை வேறு பள்ளிகளுக்கு இடமாற்றம் செய்து, மீதமுள்ள 10 ஆயிரம் பேரை பணியிறக்கம் செய்து, மாற்றுப்பணி வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான அரசாணை கடந்த ஆண்டு ஜூன் 20ம் தேதி வெளியிட்டது.




கல்வித்துறையில் தேவையற்ற செலவினங்களை கட்டுப்படுத்துமாறு, மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை, மாநில அரசுகளுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்பதால், இந்த நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின்கீழ், மாநில அரசுகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசு



கடும் கட்டுப்பாடுகளை முன்வைத்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, 15க்கும் குறைவான மாணவர் சேர்க்கை கொண்ட பள்ளிகளை, அருகாமையில் உள்ள பிற பள்ளிகளுடன் இணைக்கும் பணி நடந்து வருகிறது. இப்பணி நிறைவுபெற்றவுடன், உபரி ஆசிரியர்களை, ஆசிரியர் அல்லாத ஆங்கிலவழி கல்வி வகுப்புகளுக்கு இடமாற்றம் செய்யவும், அலுவல் பணிகளுக்கு பயன்படுத்தவும் தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது.

மருத்துவ மாணவர் சேர்க்கையில் கவுன்சலிங் முறை ரத்து, நீட் தேர்வு அமல், மாநில அரசுகளின் வரி விதிப்பு முறை ரத்து, நாடு முழுவதும் ஜிஎஸ்டி வரி அமல், மாநிலங்களுக்கு ரேஷன் பொருள் ஒதுக்கீட்டு அளவு குறைப்பு, நீதிபதிகள் தேர்வு முறையில் மாற்றம், வாகன இன்சூரன்ஸ் பிரீமியம் உயர்வு, சாலைவிபத்தில் உயிரிழந்தவர்களுக்கான நஷ்டஈடு குறைப்பு, அணைகள் பாதுகாப்பு மசோதா, மானியங்கள் ரத்து, 100 நாள் வேலைக்கு முடிவு, விவசாயிகளின் வாழ்வாதாரம் பறிப்பு, பொது சிவில் சட்டம், மாநில அரசு பஸ்களில் இந்திமொழி திணிப்பு, அகில இந்திய அளவில் ஒரே ரேஷன் கார்டு என ஒவ்வொரு துறையிலும் மத்திய அரசு தனது ஆதிக்கத்தை செலுத்தி வருகிறது. தற்போது, கல்வித்துறையிலும் மத்திய அரசு தனது அதிகாரத்தை நிலை நிறுத்தியுள்ளது. இந்த அபாய வலையில் இருந்து விடுபட்டு, மாநில அரசுகள் தங்களது தனித்தமையை நிலை நிறுத்தினால் மட்டுமே, சீர்திருத்த பணிகளை சுயமாக மேற்கொள்ள முடியும்.

- S. மோகன்

# பிளாஸ்டிக் ஆய்வின்போது வெளிவந்த அதிர்ச்சி தகவல்!



கடந்த ஜனவரி 1ம் தேதி முதல் ஒரு முறை பயன்படுத்தடும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்து தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்படி தமிழகம் முழுவதும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துபவர்களை கண்காணிக்கவும் பறிமுதல் செய்யவும் தனி குழுக்கள் அமைக்கப்பப்பட்டன. இதனைத் தொடர்ந்து தடையை மீறி பிளாஸ்டிக்பயன்படுத்துபவர்களுக்குஅபராதம் விதிப்பது தொடர்பாக சட்டதிருத்தம் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி தமிழகம் முழுவதும் அதிரடி சோதனை நடத்தப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. அதன்படி தமிழகத்தில் இதுவரை 559.49 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ₹1.78 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.சென்னையில் இதவரை 245 மெட்ரிக் டன் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தடை மீறி பிளாஸ்டிக் பயன்படுத்தியவர்களிடம் இருந்து ₹45 லட்சம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

பறிமுதல் செய்த பிளாஸ்டிக் பொருட்களை ஸ்ரீபெரும்புதூர் மறுசுழற்சி மையத்திற்கு அனுப்பி எண்ணெயாகவும், சாலை போடுவதற்கும் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் பிளாஸ்டிக் ஆய்வின்போது சென்னை மாநகராட்சியில் 3,247 கடைகள் தொழில் துறை உரிமம் இல்லாமல் செயல்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளளது.

சென்னை மாநகராட்சி அலுவலர்கள் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்படுத்தி கடைகளுக்கு அபராதம் விதிக்கும் போது அந்த கடையின் தொழில் உரிமம் எண் மற்றும் முகவரியை அபராத பில்லில் குறிப்பிட வேண்டும். அதற்காக சென்னை மாநகராட்சி ஊழியர்கள் கடை உரிமையாளர்களிடம் தொழில் உரிமம் கேட்டுள்ளனர். அவ்வாறு கேட்டபோது 3,247 கடைகள் தொழில் உரிமம் இல்லாமல் செயல்பட்டு வந்தது தெரியவந்து. இதனைத் தொடர்ந்து இந்த கடைகள் தொடர்பாக விவரங்களை சுகாதாரத் துறை அதிகாரிகள் வருவாய் துறை அதிகாரிகளுக்கு தெரிவித்தனர்.

இந்நிலையில் தொழில் உரிமம் இல்லாத அனைத்து கடைகளும் 7 நாட்டுகளுக்குள் தொழில் உரிமம் பெற வேண்டும் என்று மாநகராட்சி சார்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது. இல்லாவிடில் கடைகளுக்கு சீல் வைக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது. 63 ஆயிரம் கடைகள் சென்னை மாநகராட்சியில் மொத்தம் 63 ஆயிரம் கடைகள் தொழில் உரிமம் பெற்று செயல்பட்டுவருகிறது. 500 முதல் 12,500 வரை தொழில் உரிம கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு ₹17 கோடி வருமானம் கிடைக்கிறது.

**- குருதேவ்**



# ராஜராஜ சோழனின் மழைநீர் சேகரிப்பு தொழில்நுட்பம்

## பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்கும் பயன்படுத்தப்பட்ட திட்டம்

தலைநகரம் முதல் குக்கிராமங்கள் வரை குடிநீர் தட் டுப்பாட்டை போக்க மழைநீர் சேக ரிப்பு திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் எனக் கூறிவரும் நிலையில், 1010 ஆண்டுகளுக்கு முன்பாகவே மழை நீரை குளத்தில் சேகரித்து பாசனத் துக்கும், மக்களின் குடிநீர் தேவைக்கும் பயன்படுத்தியுள்ளனர்.

மழை நீரைச் சேகரிக்கும் விதமாக, பரந்து விரிந்துள்ள தஞ்சாவூர் பெரிய கோயில் அருகே சிவகங்கை என்கிற குளத்தை வெட்டி, கோயிலில் இருந்து அந்தக் குளத்துக்கு மழைநீர் செல்லும் வகையில் சாலவம் (நீர்ப் போக்கும் வழி) என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மழைநீரை சேமித் துள்ளார் சோழ மன்னர் ராஜராஜ சோழன்.

இந்த தொழில்நுட்பத்தை ராஜராஜ சோழனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த மராட்டிய வம் சத்தின் சரபோஜி மன்னரும் கையாண்டுள்ளார் என வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து, வரலாற்று ஆய்வாளர் மணி மாறன் கூறியதாவது: தஞ்சாவூரை ஆண்ட ராஜராஜ சோழன் தனது ஆளுகைக்கு உட்பட்ட நிலங்களை வளப்படுத்த

குளங்கள், ஏரிகளை வெட்டினார். அதேநேரம் மக்களின் குடிநீர்த் தேவைக்காக என பெரிய கோயில் அருகே சிவகங்கை குளத்தை வெட்டினார்.

மேலும், பெரிய கோயிலில் மழையின் போது கிடைக்கும் தண்ணீரை வீணாக்காமல் சேமித்துப் பயன்படுத்தும் விதமாக கோயிலின் வடக்கு புறத்தில் நீர் போக்கும் வழி எனப்படும் சாலவம் என்ற வடிகால் போன்ற அமைப்பை கருங்கற்களைக் கொண்டு அமைத்தார். இதில் தண்ணீரைத் தடுத்து அனுப்பும் முறை உள்ளது.

முதலில் பெய்யும் மழைநீர் அழுக்காக இருக்கும் என்பதால் அந்த நீர் நந்தவனத் துக்குச் செல்லும்விதமாக ஒரு சாலவத் தையும், சிறிது நேரம் கழித்துக் கிடைக்கும் சற்று தெளிவான நீரை, முதல் சாலவத்தை அடைத்துவிட்டு, சிவகங்கை குளத்துக்கு கொண்டு சேர்க்கும் விதமாக 2-வது சாலவமும் அமைத்தார் ராஜராஜ சோழன்.

சிவகங்கை குளம் நிரம்பிய பிறகு, அங்கிருந்து அய்யன் குளம், சாமந்தான் குளங்களுக்கும் தண்ணீர் செல்லும்விதமாக நீர்வழிப் பாதைகள் அமைக்கப்பட்டு, அங்கும் மழைநீர் சேமித்து வைக்கப் பட்டுள்ளது.

தஞ்சாவூர் பெரிய கோயிலில் அமைக்கப்பட்ட இந்த தொழில்நுட்பம் நல்ல பயனைக் கொடுத்ததால், அதன் பிறகு ராஜராஜ சோழன் கட்டிய அனைத்து கோயில்களிலும் இந்த மழைநீர் சேகரிப்பு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பின்னர் தஞ்சாவூரை ஆண்ட 2-ம் சரபோஜி மன்னர், ஜல சூத்திரம் என்கிற அமைப்பை உருவாக்கி, கோட்டையில் உள்ள கிணறுகள், நகரப் பகுதிகளில் உள்ள வீடுகள் ஆகியவற்றுக்கு குடிநீர் செல்லும் விதமாக ராஜராஜ சோழனின் தொழில்நுட்பத்தை மேம்படுத்தினார். இத்தகைய குடிநீர் குழாய்களை யானை மிதித்தாலும் சேதமடையாத வகையில் சுண்ணாம்புக் கலவை, சுடு மண் போன்றவற்றை கொண்டு அமைத்தார்.



இந்த வகையில், மழைநீரைச் சேமிப்ப தற்காக தஞ்சாவூர் நகரில் மட்டும் 50 குளங்களை மன்னர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். ஆனால், தற்போது அந்தக் குளங்களில் பெரும்பாலானவை ஆங்கிலேயர் காலம் வரை பராமரிக் கப்பட்டு அதன்பின்குப்பை மேடாகி ஆக்கிரமிக்கப் பட்டுவிட்டன. ஆனால் 1,010 ஆண்டு களைக் கடந்து இன்றளவும் தஞ்சாவூர் பெரிய கோயிலில் பெய்யும் மழைநீர், சாலவம் வழியாகத்தான் சிவகங்கை குளத்துக்கு செல்கிறது என்றார்.

**- வீ. சிவசங்கரன்**

## கவியரசு கண்ணதாசன் எழுதிய "நெஞ்சுக்கு நிம்மதி" புத்தகத்திலிருந்து சில வரிகள்

தகராறு இல்லாத குடும்பம் இல்லை..
வீட்டுக்கு வீடு வாசப் படி..
ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலை..
யானைக்கு தன் உடம்பைத் தூக்க
முடியவில்லையே என்ற கவலை இருந்தால்
அணிலுக்கு தன் உடம்பு இவ்வளவு சிறிதாக
இருக்கிறதே என்ற கவலை..

ஏழைக்கு தொப்பையை நிறைப்பது
கவலையென்றால்
பணக்காரருக்கு தொப்பையைக் குறைப்பது
கவலை..

காதலித்து கல்யாணம் செய்தவரும் கட்டிலைப்
பிரித்து போட்டதுண்டு
பெற்றோர் நிச்சயித்த திருமணத்திலும் பேரன்பு
பெருக்கெடுப்பதுண்டு

அன்பிருந்தும் பணமிருந்தும் சந்ததி இல்லாத
குடும்பங்களும் உண்டு
சந்ததி இருக்கும் குடும்பங்கள் சாப்பாட்டுக்கே
கஷ்டபடுவதுண்டு

அமெரிக்காவில் பகல் என்றால் இந்தியாவில்
இருட்டு
பிரச்சனை இல்லாத வாழ்க்கை எவருக்குமே
இல்லை
ஆக அடுத்தவர் நன்றாக வாழ்வது போலவும் நாம்
மட்டும் தான் கஷ்டப் படுவது போலவும் பிரமை
வேண்டாம்

கணவர் வீட்டுக்கு வரும் போதே பிர்ச்சனையோடு
வரக் கூடாது
மனைவியும் அவரை கேள்விகுறிகளோடே வர
வேற்க கூடாது..

கணவர் எதையும் அடித்து சொல்ல கூடாது
மனைவி எதையும் இடித்து பேச கூடாது

"நீங்க வாங்கின காய்கறி மகா மட்டம் "என்று
மனைவி சொன்னால்.." எந்த நாய் சொன்னது?"
என்று கணவன் பதில் சொன்னால் தான்
பிரச்சனை.. தன் தவறை ஒத்துக் கொண்டு.." சரி
இனி பார்த்து வாங்குகிறேன்" என்று சொல்லி
விட்டால் முடிந்தது

"நீ செய்த சாப்பாடு சகிக்கலை" என்று கணவன்
சொன்னால்..

"எனக்கு தெரிந்த லட்சணம் இவ்ளோதான்..
நீங்க உங்க அம்மா வீட்டுக்கு போய் சாப்பிடுங்க"
என்று மனைவி பதில் சொன்னால் தான் பூகம்பம்
ஆரம்பம்.." இன்னிக்கு உடம்பு முடில.. நாளைக்கு
நன்றாக சமைக்கிறேன்" என்று சொன்னால் அன்பு
வெள்ளம் தான்...

மனைவி புது புடவை உடுத்தினால்..." இந்த
புடவை நன்றாக இருக்கு.. அழகா இருக்கே" என்று
சொல்லணும்
கணவன் வெளியிலிருந்து வரும் போது"
ஏன் இப்படி வியர்த்திருக்கிறது.. எளச்சு
போய்ட்டீங்களே" என்று அக்கறையோடு
மனைவியும் விசாரிக்க வேண்டும்..

மனைவியைக் கணவன் "அம்மா" என்று
அழைக்கணும்
கணவனை மனைவி "அப்பா" என்று
அழைக்கணும்

தன் தாயை மனைவி நன்றாக நடத்தினால்
கணவனுக்கு நிம்மதி
தன் தாய் வீட்டை கணவன் பெருமையாக
கூறினால் மனைவிக்கு நிம்மதி

முக்கியமாக கணவனும் மனைவியும் சிந்திக்க
வேண்டிய விஷயம்.. வார்த்தைகளில் ஜாக்கிரதை

எள்ளைக் கொட்டினால் பொறுக்கி விடலாம்
சொல்லைக் கொட்டி விட்டால் பொறுக்க முடியாது

முள்ளால குத்தின காயம் ஆறிடும்
சொல்லால குத்தினா ஆறவே ஆறாது..

ஒருவரையொருவர் அனுசரித்து போனால்
உலகையே தனக்குள் அடக்கி கொள்ள முடியும்

இரண்டு கைத் தட்டினால் தான் ஓசை என்பார்கள்..
ஒருவர் கோபம் கொள்ளும் போது இன்னொருவர்
விட்டு கொடுக்க வேண்டும்..

"பெண்டாட்டி தானே சொல்லிவிட்டு போகிறாள்
".என்றும்.."கணவன் தானே ..பேசட்டும்" என்றும்
விட்டுக் கொடுத்து விட்டால் உள்ளம் துடிக்காது..
உடல் வலிக்காது..ஊர் சிரிக்காது..

வாழ்க இல்லறம் !

- கவிஞர் நிவேதிதா

# ஒரு விவசாயி

## முதல்வர் ஆகக்கூடாதா?

### முதல்வர் பழனிசாமி ஆவேசம்

வேலூர் மக்களவைத் தேர்தலுக்காக வேட்பாளர்களை ஆதரித்து கட்சி தலைவர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர். அதிமுக கூட்டணி கட்சி வேட்பாளர் ஏ.சி.சண்முகத்தை ஆதரித்து முதல்வர் எடப்பாடி பழனிசாமி, அமைச்சர் ராஜேந்திர பாலாஜி ஆகியோர் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டனர்.

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பத்தில் பேசிய முதல்வர் எடப்பாடி பழனிசாமி, “இந்தியாவில் உள்ள 543 நாடாளுமன்றத் தொகுதிகளில் வேலூர் தேர்தல் மட்டும் நிறுத்தப்பட்டது ஏன்? கட்டுக்கட்டாக வாக்காளர்களுக்கு கொடுக்க பணம் பதுக்கிவைக்கப்பட்டதால் இந்தத் தேர்தல் நிறுத்தப்பட்டது. ஸ்டாலின் அவர்களே ஆதாரம் எல்லாம் தேர்தல் ஆணையத்திடம் உள்ளது. இந்த வழக்குகள் எல்லாம் விசாரணைக்கு வரும் தயாராக இருங்கள்.

நான் என்றைக்கும் விவசாயம் செய்து கொண்டிருக்கிறேன். நான் ஒரு விவசாயி. ஒரு விவசாயி முதல்வர் ஆகக்கூடாதா? என ஆவேசமாக கேள்வி எழுப்பினார். மேலும் விவசாயிகளையும், தொழிலாளர்களையும் இரண்டு கண்களாக பாவித்து இந்த அரசு காத்து வருகிறது .

இறைவன் எங்கள் பக்கம் இருக்கின்றார். இரு பெரும் தலைவர்கள் மேல் இருந்து எங்களை ஆசீர்வதித்து கொண்டிருக்கின்றனர். இந்தியாவிலேயே மக்களுக்காக தொடங்கப்பட்ட இயக்கம் அதிமுக. நாட்டு மக்களுக்காக எவ்வளவோ போராடிய தலைவர்கள் இருக்கும்போது, உதயநிதிக்கு ஏன் பட்டாபிஷேகம் செய்ய துடிக்கிறார்? என்றார்.



மழை வந்த காரணத்தினால் அவசர அவசரமாக பேச்சை நிறைவு செய்த முதல்வர் பழனிசாமி,கே.வி.குப்பம் தனி தாலுகாவாக அறிவிக்கப்படும் என்று அறிவித்தார்.

பி.ஜே.பி-யின் அடிமை அ.தி.மு.க எடப்பாடியின் எடுபிடி ஏ.சி.சண்முகம். நாங்கள் மிட்டாய் கொடுத்து ஓட்டு வாங்கியதாகப் பிரசாரம் செய்கிறார் முதல்வர். அப்படியென்றால், தேனி தொகுதியில் அவர்கள் அல்வா கொடுத்து வெற்றி பெற்றார்களா? திருநெல்வேலி அல்வாவா... இல்லை, டெல்லி அல்வாவா? ‘நான்தான் ஸ்டாலின்’ என்பதை, சின்ன குழந்தையும் சொல்லும். எடப்பாடியை யாராவது அடையாளம் காட்டுவார்களா? நான், இப்போது நினைத்தால்கூட ஆட்சியைக் கலைத்துவிடுவேன். கொல்லைப்புறமாக



ஆட்சிக்கட்டிலில் அமரக் கூடாது என்று கலைஞர் சொல்லியிருப்பதால், அமைதியாக இருக்கிறேன். ஆட்சி தொடர, பி.ஜே.பி-யிடம் மாதம்தோறும் கப்பம் கட்டுகிறார்கள்!’’ என்று தி.மு.க தலைவர் ஸ்டாலினின் கூறினார்.

- ஆசிரியர்

## எச்சரிக்கை ரிப்போர்ட்




ஒரு குழந்தைக்குரிய குதூகலங்கள், சுவாரசியங்கள், சேட்டைகள் எதுவும் இல்லாமல் ஒரு குழந்தை ஒரு கருவியுடன் பல மணி நேரம் இருக்குமென்றால் அந்தக் கருவி மீது நாம் நிச்சயம் அச்சம்கொள்ளத்தான் வேண்டும். குழந்தைத்தன்மையைப் பறித்துக்கொள்ளும் எதுவும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பானதல்ல. இரண்டு வயது குழந்தைக்கே செல்போன் கொடுத்து சாப்பாடு ஊட்டும் பெற்றோர்கள், சாப்பாட்டோடு சேர்த்து ஒரு மிகப் பெரிய ஆபத்தையும் ஊட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

செல்போனிலிருந்து வெளியாகும் ரேடியோ கதிர்கள் குழந்தைகளின் மூளை வளர்ச்சியைப் பாதிக்கின்றன என்பதைப் பல்வேறு ஆய்வுகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. குழந்தைகளின் சிந்தனைத்திறன், வளர்ச்சி, பசி, தூக்கம் என அத்தனையும் செல்போனால் பாதிப்படைகின்றன என்பதைப் பல்வேறு பெற்றோரும் அறிந்து வைத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்கள் மீண்டும் மீண்டும் குழந்தைகளின் கைகளில் செல்போனைத் தயக்கமின்றிக் கொடுக்கிறார்கள்.

செல்போனால் நன்மையே இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். அமெரிக்காவின் சீதோஷ்ண நிலையோ சீனாவின் வணிகமோ கியுபாவின் பொருளாதாரமோ ஜப்பானின் தொழில்வளர்ச்சியோ - எதுவாக இருந்தாலும் உடனடியாக அதைத் தெரிந்து கொள்ள முடியும், உலகின் எந்த மூலையில் இருந்தாலும் உரையாட முடியும் என நாம் ஆரோக்கியமான விஷயங்களாக என்னென்னவோ பட்டியலிடலாம்தான். ஆனால், செல்போனைப் பயன்படுத்தும் நம் குழந்தைகளில் எத்தனை பேர் இதுபோன்ற விஷயங்களுக்காகப் பயன்படுத்துகிறார்கள்? அந்த எண்ணிக்கை வெகு சொற்பம்தான்.

**குழந்தைகளைச் சரியாகத்தான் வளர்க்கிறோமா?:** உலகளவில் பத்திலிருந்து பன்னிரண்டு வயதுக்குள் இருக்கும் குழந்தை களில் 45% குழந்தைகள் சொந்தமாக ஸ்மார்ட்போன் வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறது 2017-ல் நீல்சன் நடத்திய ஆய்வு. இந்தியாவில் நடத்தப்பட்ட இதே போன்ற ஆய்வில், கிட்டத்தட்ட மூன்று கோடி குழந்தைகள் ஸ்மார்ட்போன் பயன்படுத்துகிறார்கள் எனத் தெரியவந்திருக்கிறது. இதில் பத்து வயதுக்குக் கீழிருக்கும் குழந்தைகள் மட்டும் 20%. கிட்டத்தட்ட அறுபது லட்சம் குழந்தைகள். இதையெல்லாம் பார்க்கும்போது நாம் நம்மை நோக்கிக் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி ஒன்று இருக்கிறது: 'நமது குழந்தைகளை நாம் சரியாகத்தான் வளர்க்கிறோமா?'



இந்தப் பிரச்சினைகளெல்லாம் நமது கையை விட்டுச் செல்வதற்குள் நாம் விழித்துக்கொள்ள வேண்டும். நமது செல்போன் உபயோகத்தை முறைப்படுத்துவதுதான் நாம் முதலில் செய்ய வேண்டிய கடமை. செல்போன்களை அதிகமாகப் பயன்படுத்தும் குடும்பங்களில் குழந்தைகளும் அதில் அதிக நேரம் மூழ்கி விடுகிறார்கள் என்கின்றன பல்வேறு ஆய்வு முடிவுகள். குழந்தைகள் என்ன சாப்பிட வேண்டும், என்ன படிக்க வேண்டும், எதை யெல்லாம் கற்றுக்கொள்ள வேண்டும், யாரிடம் பேச வேண்டும், யாரிடம் பேசக் கூடாது என எல்லாவற்றிலும் மிகுந்த கவனத்தோடு இருக்கும் பெற்றோர்களால் எப்படிக் குழந்தை களின் செல்போன் பயன்பாட்டை மட்டும் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை? இது நாம் ஆழ்ந்த பரிசீலனைக்கு உட்படுத்த



வேண்டிய விஷயம். உண்மையில், இது பெற்றோர்களிடமிருந்துதான் தொடங்குகிறது. குழந்தைகளைப் பேராபத்திலிருந்து மீட்டு வருவது என்பது இன்றைய காலத்துப் பெற்றோர் கள் முன்னிருக்கும் மிகப் பெரிய சவால். ஆனால், பெற்றோர்கள் இன்னமும் தீவிரமாக உணராமலிருப்பது துரதிர்ஷ்டமான ஒன்று.

**எப்படி சரிசெய்வது?:** 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு எக்காரணம் கொண்டும் செல்போன் தரக் கூடாது. அவர்களது செல்போன் பழக்கமானது பெற்றோர்களின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். வெளிப்படைத்தன்மையுடன் இருக்கச் சொல்லி அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.



சாப்பிடும்போது, தூங்கச்செல்லும்போது செல்போன் பயன்படுத்துவதற்கு உறுதியாக ‘நோ’ சொல்ல வேண்டும். குழந்தைகளின் உலகத்தில் நமக்கு ஓரளவாவது பரிச்சயம் இருக்க வேண்டும்; குறிப்பாக, செல்போன் தொடர்பான தொழில்நுட்பங்களில். எந்த எதிர்பார்ப்புகளும் போட்டி மனப்பான்மையும் இல்லாமல் மற்ற குழந்தைகளுடன் விளையாடுவதை ஊக்குவிக்க வேண்டும். வாழ்வின் மதிப்பீடுகள், சமூக அக்கறைகள் போன்றவற்றைக் குழந்தைகளின் மனதில் நமது சின்னச் சின்ன செய்கைகள் மூலம் பதிய வைக்க வேண்டும்.

இணையத்தின் வருகைக்குப் பிறகு நமது வாழ்க்கையின் முகம் மாறியிருக்கிறது. ஒரு மனிதரின் நல்லியல்புகள் மீதான நிர்ப்பந்தங்கள் குறைந்திருக்கின்றன. நல்லி யல்போடு இருப்பது என்பதையே நகைப்புக் குரியதாகப் பார்க்கும் அவலமும் நேர்ந்திருக்கிறது. சமூக அக்கறையற்று இருப்பதன் விளைவுகளை நமது குழந்தைகளின் மாறிவரும் சிந்தனைப்போக்கின் வழியாக நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். செல் போன்கள் பலவகைகளில் மிகப் பெரும் எதிர்மறைத் தாக்கத்தை இந்தத் தலைமுறையில் உண்டாக்கியிருக்கிறது. குறிப்பாக, சக மனிதர் களுடன் இணக்கமான உறவாடல் அற்ற நிலையை உருவாக்கியிருக்கிறது. பெருங்கூட் டத்துக்கு நடுவிலும் தனித்திருப்பது இப்போது இயல்பாகியிருக்கிறது. சமூக வலைதளங்களின் குணாம்சமும் அதுவாகத்தானே இருக்கிறது?

**- ராஜேந்திரன்**

# அறிவுரை சொன்ன நட்சத்திரம்

ஒருபக்க சிறுகதை

ஒரு நாள் இரவு சந்திரன் தனியாக அமர்ந்து புலம்பிக் கொண்டிருந்தது. அப்பொழுது அங்கு வந்த நட்சத்திரம், "என்ன ஆயிற்று? எதற்காக இப்படி புலம்பிக் கொண்டு இருக்கிறாய்" என்றது. அதற்கு சந்திரன் "ஏன்னை யாருக்கும் பிடிக்கவில்லை. மக்கள் என்னை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை" என்றது.



நட்சத்திரம் கேட்டது "எப்படி பிடிக்க வில்லை எங்கிறாய்"? சந்திரன் சொன்னது "சூரியன், இடி, மின்னல், மழை இதற்கு எல்லாம் மக்கள் பயப்படுகிறார்கள். சூரியனை வணங்கு கிறார்கள். அதுமட்டுமில்லாமல், மழை வரவில்லை என்றால் விவசாயிகள் கடவுளிட வேண்டுகிறார்கள். ஆனால் என்னை யாரும் வணங்குவதுமில்லை, வேண்டுவதுமில்லை" என்று சொல்லிவிட்டு மீண்டும் புலம்ப ஆரம்பித்தது.

நட்சத்திரம் சொன்னது "அட கிறுக்கு சந்திரனே! உன்னை பிடிக்கவில்லை என்று யார் சொன்னார்கள். உன்னை பிடிக்காதவர்கள் இவ்வுலகில் யாரும் இல்லை அது தெரியுமா உனக்கு? சந்திரன் கேட்டது " எவ்வாறு இப்படி சொல்கிறாய்?"

"அப்படி கேள்! உணவு உண்ண மறுக்கும் மழலைக்களுக்கு இரவு நேரங்களில் நீதான் வேடிக்கை! உன்னை காட்டிதான் தங்கள் குழந்தைகளின் பசியை போக்குகிறார்கள். சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக பிரிந்து வாழும் காதலர்கள், கனவன்கள் மற்றும் மனைவிகள் எங்கேயோ இருந்து கொண்டு அலைபேசியில் பேசிக்கொண்டே உன்னை பார்த்தபடியே தங்களது அன்பை பரிமாறிக் கொள்கிறார்கள். தை மாதத்தில் உனக்கென்று நிலாச்சோறு குழந்தைகள் படைத்து பாடல்கள் பாடி கொண்டாடுகிறார்கள். உன்னை பார்த்து பல கவிஞர்கள் கவிதை எழுதுகிறார்கள். எவ்வளவு கல்நெஞ்சம் படைத்த உள்ளம் உன்னை பார்த்தால் மெய்மறந்து விடுவார்கள். அதுமட்டு மின்றி இராணுவ வீரர்களுக்கு ஒவ்வொரு இரவிலும் உன் ஒளியே அவர்களுக்கு துணையாக நிற்கும்".

"இப்படி அனைத்து மக்களும் உன்னை அதிகமாக நேசிக்கிறார்கள். இப்போது நீதான் அனைவருக்கும் ராஜா. சூரியன், இடி, மின்னல், மழை இவர்களால் மக்களுக்கு என்றுமே ஆபத்துதான்".

இதை கேட்டவுடன் சந்திரனுக்கு அள்வில்லாத மகிழ்ச்சி. இருவரும் பேசிக்கொண்டே அன்றய இரவை கழித்தனர்.

நம்முடைய குணங்கள் நமக்கு தெரிவதில்லை நம்முடன் இருக்கும் நம்பிக்கையான உறவு அது அம்மா, அப்பா, குரு, அண்ணன், தங்கை, தோழன், தோழி என்று யாராக இருந்தாலும் நம்முடைய மனக்குழப்பத்திற்கு நல்ல அறிவுரைகளையே கூறுவார்கள்.

**- ம.சாந்தி, ஈரோடு**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. **Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.

# ஒன்றுபட்டு வலிமை சேர்ப்போம்...

மக்கள் விசாரணை | அரசியல் தீர்ப்பு | அருணை முரசு ARUNAI MURASU

பீப்பிள் டுடே PEOPLE TODAY | நமது நகரம் | அரசியல் முத்திரை

பேனா முள் | திரை தீபம் | அதிரடி குரல் | கடல்சிற்பி KADAL CHIRPI

தொட்டில் செய்தி | சட்ட கேடயம் | விழா முரசு | ரிப்போர்ட்டர் வேர்ல்ட்

அதிரடி தீர்ப்பு | புரசை எக்ஸ்பிரஸ் தமிழ் வார இதழ் | சிலந்தி வலை SILANTHI VALAI English & Tamil Monthly | மண்ணின் குரல்

அமுதம் ரிப்போர்ட்டர் | நுண்ணறிவு | வெற்றி யுகம் POLITICAL & CRIME MONTHLY | REPORTER VISION

திங்கள் மலர் ENLIGHT THE PEOPLE | நாற்காலி செய்தி | போலீஸ் ரிப்போர்ட்டர் | உரிமை ரிப்போர்ட்டர் URIMAI REPORTER

கடல் துளிகள் KADAL THULIGAL | பாக்கியம் சினிமா BAKKIYAM CINEMA - TAMIL MONTHLY MAGAZINE | தமிழன் குரல் | PRESS

மக்கள் பார்வை | வாசன் பார்வை | மக்கள் விருப்பம் MAKKAL VIRUPPAM Tamil Monthly Magazine | சேது நியூஸ்

THE DECEMBER MAIL English Monthly | தொகுதி முரசு THOGUTHI MURASU | மூன்றாம் கண் moondram kan | உள்ளாட்சி சுடர் மாதமிருமுறை

முள்ளும் மலரும் | DAILY INDIA NEWS | FACE NEWS | சென்னை செய்திகள் CHENNAI SEITHIGAL

பல்லவன் முரசு | நியூஸ் பிரிட்ஜ் NEWS BRIDGE | ஜித்தன் | விழிப்புணர்வின் குரல்

மெய் எழுத்து | தர்ம ராஜ்ஜியம் | FINE TIME English & Tamil Weekly | புதுவை ஒளி PUDHUVAI OLI

வீரத்தலைமுறை | PEOPLE PLUS English & Tamil Weekly | ஸ்ரீ ஆஞ்சநேயா விஜயம் | தொழில் பார்வை

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Regd. No.: **TN/CC(S)DN/461/19-21**
Registered with Registrar of Newspaper for India Under **No.: TNTAM44870/2012**
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month




Also visit our MAKKAL VISARANAI website http://makkalvisaranai.com/ and enjoy reading more

Scan now to download the eBook (PDF)

Scan now to download the App